# பூங்கதிர்

இதழ் 07




வெளியீடு:

**பொது நூலகம் - பூநகரி**
**கிளிநொச்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கதிர்

**இதழ் - 07**




**வெளியீடு**

பூநகரி பொது நூலகம்,
கிளிநொச்சி

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | | |
|---|---|---|
| மலர் | : | பூங்கதிர் |
| உரிமை | : | ஆலோசனைக்குழு,<br>பூநகரி பொது நூலகம். |
| பதிப்பு | : | டிசெம்பர் 2019 |
| பிரதிகள் | : | 150 |
| வெளியீடு | : | நூலகர்,<br>பூநகரி பொது நூலகம். |
| அச்சுப்பதிப்பு | : | Mickey Printing Specilists<br>Chavakachcheri. |
| அலகொன்றின் செலவு | : | 255/- |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ :021 2280024 021 2221595,
Fax :021 2280024 021 2221595,
Mobile :077 6913244
Email : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
**பாராளுமன்றம்**
**PARLIAMENT**

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ :021 2280024 021 2221595,
Fax :021 2280024 021 2221595,
Mobile :077 6913244
Email : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com



**2019.11.21**

## "பூங்கதிர்' வெளியீடு சிறக்கட்டும்

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பூநகரி பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பூநகரி பொதுநூலகம் எட்டாவது தடவையாக வெளியீடு செய்யும் 'பூங்கதிர்' சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

இணைய வழிப்பட்ட இயந்திரமயமான காலச்சூழலில் தான் சார்ந்த சமூகத்தினரிடம் மெல்லமெல்ல இல்லாது போகும் வாசிப்புப் பழக்கம் மீதான நாட்டத்தை அதிகரிக்கவும், அவர்தம் அறிவையும், ஆற்றலையும், ஆளுமையையும் வெளிக்கொணர்ந்து அவர்களையும் கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும், படைப்பிலக்கியவாதிகளாகவும் அடையாளப்படுத்துவதை மட்டுமே நோக்காகக் கொண்ட ஓர் ஆவணப்பதிவாக பூங்கதிர் சஞ்சிகை தனது எட்டாவது இதழ் வெளியீட்டை எட்டி நிற்பது மனநிறைவளிக்கிறது.

எமது பிரதேசத்தின் இளம் கலைஞர்களும், படைப்பாளிகளும், மாணவர்களும் இலைமறை காய்களாக தம்முள் புதைந்திருக்கும் திறமைகளை இனங்காண்பதற்கு முடியாமலும், தம்மை வெளிப்படுத்துவதற்கான களங்களற்ற நிலையிலும் வெறும் சாமான்ய மனிதர்களாகவே மறைந்து வாழும் இன்றைய சூழலில் அத்தகையோரின் படைப்பாற்றல்களை வெளிக்கொணர்வதற்கான ஆரம்ப களமாகவும், அடுத்தகட்ட நகர்வுக்கான உந்துதலாகவும் வருடாவருடம் வெளியீடு காணும் பூங்கதிரின் எட்டாவது இதழ் வெளியீடு சிறக்க வாழ்த்துக்களையும், அதற்காக அரும்பாடுபட்ட அனைத்து தரப்பினருக்கும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல : 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ தவிசாளரின்

# வாழ்த்துச் செய்தி

எமது பிரதேசசபையின் பூநகரி பொது நூலகத்தினால் ஆண்டு தோறும் வெளியிடப்பட்டுவரும் "பூங்கதிர்" சஞ்சிகைக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தொடர்ந்து ஏழாவது இதழாக வெளிவரும் நூல் மேன் மேலும் பலசிறப்புக்களையும் விருதுகளையும் பெற பூநகரி பிரதேசசபையின் தவிசாளர் என்கின்றவகையில் வாழ்த்தி நிற்கின்றேன்.

பல்சுவை அம்சங்களையும் தாங்கி வருகின்ற இச் சஞ்சிகையானது ஆண்டு தோறும் புதுப் பொலிவுடன் இப் பிரதேசமக்களினதும் ஆசிரியர்களினதும் எம் பிரதேசசபையின் ஊழியர்களினதும் ஆக்கங்களை தாங்கி வருகின்றமை இதன் சிறப்பம்சமாகும். நூல் வெளியீட்டில் முன்னின்று உழைக்கும் நூலகர் திருமதி. தர்ஷனிஅவர்களுக்கும் அவரை வழிகாட்டிய எமது பிரதேசசபையின் செயலாளர் திரு. கணேசன் கம்ஸநாதன் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

மக்கள் சேவையில்

**அருணாசலம் ஐயம்பிள்ளை (JP)**

கௌரவ தவிசாளர்

பிரதேச சபை, பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

பூநகரி பிரதேச சபையின் பொது நூலாகத்தினால் வருடம்தோறும் சிறப்பாக வெளியிடப்படும் பூங்கதிர் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். நூல் வெளியீட்டிற்கு பாடுபட்டு உழைத்த அனைவரையும் பாராட்டுகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்று அம்சங்களையும் பண்பாட்டு தடையங்களையும் பேணிப்பாதுகாத்துவரும் ஒரு பிரதேசமே பூநகரியாகும். இப்பிரதேசத்தின் பாரம்பரிய தடயங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பூநகரி பிரதேசசபை மிகவும் பொறுப்புடன் செயலாற்றியுள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எமது பிரதேசத்தின் வாழ்வியல் அம்சங்களான பேச்சுவழக்கு, விருந்தினரை உபசரித்தல், வரவேற்றல், வழியனுப்புதல், உணவு உண்ணுதல் முதலான அனைத்து விடையங்களையும் ஆவணமாக்கத்தக்க வகையில் ஆக்கங்களை எழுதுவோர் முன்வரவேண்டும் என்பதையும் இவ்வேளையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நூலகப்பணி எதிர்காலத்தில் தொடர எனது வாழ்த்துக்கள்.

**சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன்,**
உபதவிசாளர்,
பிரதேச சபை,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூங்கதிர் புதுமை படைக்கட்டும்

பூநகரி பிரதேசசபையானது தனது அதிகார பிரதேசத்துக்குள் மக்கள் அத்தியாவசிய சேவைகள், வீதிகள் அமைத்தல், சுகாதாரம் பேணல் போன்ற பணிகளுடன் தனது நூலக சேவைகளையும் ஆற்றி வருகின்றது. இந்த வகையில் கடந்த காலங்களில் மக்களினது தேவை அறிந்து வாசகர்களுக்கும், மாணவர்களுக்கும் தேவையான புத்தகத்தை கொள்வனவு செய்து நூலக சேவையினை விரிவுபடுத்தி வருகின்றது.

இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான நவீன சாதனங்களால் வளர்ச்சிப்போக்கில் வாசிப்பு என்பது எம்மிடையே மிகவும் அருகிவருவது காணக்கூடியதாகவுள்ளது. எனவே வாசிப்பின் முக்கியத்துவத்தினை கருப்பொருளாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தில் தேசிய ஆவணமாக்கல் சபையால் நாடு முழுவதும் வாசிப்பு மாதமாகவும், வாசிப்பினை ஊக்குவிக்கும் நிகழ்வாகவும் பிரகடனப்படுத்தி வருகின்றது.

இந்த வகையில் பூநகரி பிரதேச சபையானது தனது உப அலுவலக பூநகரி, பல்லவராயன்கட்டு, இரணைதீவு ஆகிய நூலகங்கள் இவ்வாசிப்பு மாத நிகழ்வுகளை சிறப்பாக நடாத்தி அதன் சிறப்பம்சமாக பூங்கதிர், முத்தொழி, பல்லவம் போன்ற முத்தான மூன்று சஞ்சிகையை வருடந்தோறும் வெளியிட்டு வருகின்றது. அத்துடன் கடந்த காலத்தில் தேசிய ஆவணமாக்கல் சபையால் பல விருதுபெற்று உள்ளது என்பது பெருமைபட வேண்டிய விடயமாகும்.

பூநகரி பொது நூலகத்தால் இவ்வாண்டும் ஏழாவது இதழாக வெளிவரும் பூங்கதிர் நல்ல அறிவுசார் ஆக்கங்களை சுமந்து வருவதுடன் மாணவர்களிடையே புதைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொண்டு வரும் ஒரு படைப்பாக உள்ளது என்பதில் பெருமகிழ்ச்சியடைவதுடன் இவ்விதம் தொடர்ந்து வெளிவருவதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க. கம்ஸநாதன்**
செயலாளர்,
பிரதேசசபை, பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

ஐப்பசி பிறந்தால் வாசிப்பு மாதம் நினைவுக்கு வந்து விடும். நூல்கள் நூலகங்களின் பயன்பாடுகள் குறித்தும் தேவைகள் குறித்தும் வாசிப்பிற்காக வாசகர்களை தூண்டும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் குறித்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

வாசிப்பு மாதத்தின் அற்புதமான ஒரு செயற்பாடாக "பூங்கதிர்" காத்திரத் தன்மையோடு வெளிவருவதென்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தளம்பலின்றி தொடர்ச்சியாக ஏழாவது சஞ்சிகை வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எம்மால் இயன்ற ஒன்றைச் சமூகத்திற்கு ஆர்வத்துடன் வழங்கிய பெருமையுடன் பூநகரிப் பிரதேசசபையும் நூலகமும் நிமிர்ந்து நிற்கின்றது.

சமூகத்தின் நலனில் நடத்தையில் மாற்றத்தை உண்டு பண்ண வல்லவை நல்ல நூலகங்களே. அந்தப் பணியைச் செம்மையுறச் செய்யும் நூலகசேவை வளரவும் பூங்கதிர் நறுமணம் கொண்டு மலரவும் எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**ந.பிரபாகரன்**
பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வாசிப்பதனால் மனிதன் பூரணமனிதனாகின்றான் என்பது உலகறிந்த உண்மை. காலத்தை காட்டும் கண்ணாடியாக வாழ்வை வாழ வழிகாட்டும் வழிகாட்டியாக நூல்கள் விளங்குகின்றன.

வாசிப்பை புனிதமாக உணரும் ஒருமனிதன் தான் வாழ்வை முறைப்படி வாழ்ந்தவன் ஆகின்றான். அந்த வகையிலே சின்னஞ்சிறு பராயத்திலேயே வாசிப்புப் பழக்கம் தூண்டப்படவேண்டும். சிறுவயதிலேயே வாசிக்கத் தொடங்கும் பிள்ளையால் மொழியாளுமையைப் பெற்றுக் கொள்ளமுடிகின்றது. அதன் அடிப்படையில் வயதிற்கேற்றவாசிக்கும் நூல்களை முறைப்படி வழங்கும் பூநகரிப் பிரதேசசபையின் நூலகப் பணி பாராட்டுக்குரியது. பூங்கதிர் சஞ்சிகை ஆண்டு தோறும் ஐப்பசியில் வெளிவருவது போற்றுதற்குரியது. பூங்கதிர் சிறந்து வளர வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

**க. தனபாலசிங்கம்**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூங்கதிர் சஞ்சிகைக்கான

# வாழ்த்துச் செய்தி



2019ம் ஆண்டிற்கான வாசிப்பு வாரத்தினை முன்னிட்டு பூநகரி பிரதேசசபையின் கீழுள்ள பொது நூலகத்தினால் வெளியிடப்படும் பூங்கதிர் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வாசிப்பதனால் மனிதன் பூரணஅறிவுபெறுகிறான். இன்றைய நவீன தொழி நுட்ப நூற்றாண்டில் வாசித்தல் என்பதுஅருகி வருகின்ற நிலையில் வாசிப்பு ஆர்வத்தினை ஊக்குவிக்கும் சிந்தனையோடு பூநகரி பிரதேசசபையின் பொது நூலகத்தினால் ஆண்டுதோறும் நடாத்தப்படுகின்ற இச் சஞ்சிகை வெளியீடானது மிகவும் முன்மாதிரியான செயற்பாடாக அமைந்து வருகின்றது.

இச்சஞ்சிகையானது பூநகரி பிரதேச இலக்கிய கர்த்தாக்களுக்கு களமமைத்து கொடுப்பதோடு இலைமறைகாய்களாக இருக்கும் எழுத்தாளர்களை வெளிக்கொண்டு வருகின்றது. கலை இலக்கியம் நல்லசிந்தனைகள்,அறிவியல் போன்ற அம்சங்களை தாங்கி வருவதோடு கருத்தாளம் மிக்கசஞ்சிகையாகவும் உள்ளது. இத்தகைய விடயங்களை தன்னகத்தே கொண்டுள்ளமையால் வாசகர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கின்றது. இச் சஞ்சிகையின் வாசிப்பின் ஊடாக நல்லதொரு சுவாசிப்பை சமூகம் பெறவேண்டும் எனவாழ்த்துக்கள் கூறி அமைகின்றேன்.

பிரதேசசெயலாளர்,
பிரதேசசெயலகம்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூங்கதிர் சஞ்சிகைக்கான

## வாழ்த்துரை

பூநகரி பிரதேசசபைக்குட்பட்ட பூநகரி பொது நூலகத்தினால் வாசிப்பு மாத நிகழ்வினை முன்னிட்டு வெளியிடப்படும் கட்டுரை, சிறுகதை, கவிதை போன்ற ஆக்கங்களை உள்ளடக்கிய "பூங்கதிர் இதழ் - 07" மலர் இவ் வருடம் புத்தொளியுடன் வெளிவருவதையிட்டு மனம் பூரிப்படைகின்ற அதேவேளை வெளியீட்டிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய சமுதாயத்தில் கதை, கட்டுரை, கவிதை போன்ற ஆக்கங்கள் எழுதுவதிலும் வாசிப்பதிலும் ஈடுபாடு குறைந்து இலத்திரணியல் சாதனங்களின் பாவனை அதிகரித்துள்ள போதிலும் பூநகரி பொது நூலகத்தினால் வெளியிடப்படும் நூலானது சமூகத்தின் ஆளுமை, அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, கலை, கலாச்சாரம், ஆக்கம் என்பனவற்றின் வெளிப்பாடாகவே திகழ்கின்றது.

இம் மலர் வெளியீடு ஒர் வெளியீடாக அமையப் பாடுபட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்களே. இம் மலரானது எதிர்காலத்தில் பல ஆக்கங்களைத் தாங்கிய பலபடைப்பாளிகளை உருவாக்கி புதுப் பொலிவுடன் மலர வாழ்த்துகின்றேன்.

ஆ.உதயணன்.
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகரின் உள் மனத்திலிருந்து....

பூநகரி பிரதேச சபையின் பூநகரி பொது நூலகத்தினால் ஆண்டு தோறும் வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாக கடந்த ஆண்டுகள் போல் இவ்வாண்டும் "வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்" எனும் தொனிப் பொருளில் பூநகரி பொது நூலகத்தின் ஆளுகையின் கீழ் உள்ள 13 பாடசாலை மாணவர்களிடமும் 20 முன்பள்ளி மாணவர்களிடமும் வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாக கவிதை, கட்டுரை, பேச்சு, சிறுகதை, நாடகம், வில்லுப்பாட்டு, சித்திரம் வரைதல், சுவரொட்டி, அட்டைப்படம் போன்ற நிகழ்வுகளும் மற்றும் நூலக அங்கத்தவர்களுக்கான போட்டிகளும் சனசமூக நிலையங்களுக்கிடையிலான கிராம வரலாறு சம்பந்தமான போட்டிகள் மற்றும் புத்தகக் கண்காட்சிகள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு, வாசிப்பு முகாம், நூலக கொடி வாரம், பாடசாலை மாணவருக்கான இலவச அங்கத்துவம், முன்பள்ளி மாணவர்களுக்கு கதை சொல்லும் நேரம், நிறந்தீட்டல், வாசிப்பு பேரணி, பூங்கதிர் சஞ்சிகைக்கான ஆக்கங்கள் சேகரித்தல் போன்ற நிகழ்வுகளும் சிறப்பாக முன்னெடுத்து சென்றதையிட்டு பெருமையடைவதுடன்

பூநகரி பொது நூலகமானது அங்கத்தவர்களை அதிகரித்து வாசிப்பின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் மாணவர்களின் ஆக்கங்களையும், வாசகர்களின் ஆக்கங்களையும் தேசிய வாசிப்பு மாத போட்டியில் முதலிடம் பெற்ற ஆக்கங்களையும் பூங்கதிர் இதழ் - 07 வெளியிடுவதனையிட்டு மகிழ்வடைவதுடன் இவ்விதழின் உருவாக்கத்திற்கு உதவிய பூநகரி பிரதேச சபை நிர்வாகம், நூலக ஆலோசனைக் குழு மற்றும் ஆக்கங்கள் தந்துதவிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு பூங்கதிர் சஞ்சிகையானது பூநகரி மண்ணில் புத்தொளிவுற்று வலம் வர அனைத்து வாசகர்களையும் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**திருமதி காந்தரூபன் தர்ஷினி**

நூலகர். பூநகரி பொது நூலகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் - ஒக்டோபர் 2019

# பூநகரி பொது நூலக செயற்திட்ட குழு அங்கத்தவர்கள்

1. கௌரவ திரு அ.ஐயம்பிள்ளை - தலைவர் - கௌரவ தவிசாளர், பூநகரி பிரதேசசபை
2. திரு க.தம்ஸநாதன் - உபதலைவர் - செயலாளர், பூநகரி பிரதேசசபை
3. திருமதி. கா.தர்ஷனி - செயலாளர் - நூலகர், பூநகரி பிரதேசசபை
4. திரு. கே.தனபாலசிங்கம் - ஆலோசகர் - சனசமூக உத்தியோகத்தர்
5. திரு பொன் தில்லைநாதன் - அங்கத்தவர் - எழுத்தாளர், பூநகரி
6. திருமதி. இ.சூரியகுமாரி - அங்கத்தவர் - அதிபர், கிளி/நல்லூர் மகாவித்தியாலயம்
7. திருமதி S.M.F. பிறிட்ஜெற் - அங்கத்தவர் - சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ உறுப்பினர்களின் விபரம்
# பூநகரி பிரதேச சபை - 2019

| இல | முழுப்பெயர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 01 | கௌரவ தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை | 077 418 9656 |
| 02 | கௌரவ உபதவிசாளர் சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன் | 077 886 2556 |
| 03 | கௌரவ உறுப்பினர் இராசையா பூபாலசிங்கம் | 077 904 7195 |
| 04 | கௌரவ உறுப்பினர் விக்கினேஸ்வரன் ஜெயகாந்-தன் | 077 876 7223 |
| 05 | கௌரவ உறுப்பினர் கணேசமூர்த்தி கருணாகரன் | 077 198 9909 |
| 06 | கௌரவ உறுப்பினர் இராமுப்பிள்ளை செல்வராசா | 076 858 2126 |
| 07 | கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சந்திரபோஸ் | 076 641 8016 |
| 08 | கௌரவ உறுப்பினர் ஜெயசித்திரா தயானந்தன் | 077 699 5413 |
| 09 | கௌரவ உறுப்பினர் முடியப்பு எமிலியாம்பிள்ளை | 076 925 1766 |
| 10 | கௌரவ உறுப்பினர் அருணாசலம் கேதீஸ்வரன் | 077 654 8218 |
| 11 | கௌரவ உறுப்பினர் கணவதிப்பிள்ளை தர்மராசா | 077 463 7756 |
| 12 | கௌரவ உறுப்பினர் ஞானம் ரதிகரன் | 076 696 6279 |
| 13 | கௌரவ உறுப்பினர் உதயதர்சினி தனேந்திரன் | 077 424 6014 |
| 14 | கௌரவ உறுப்பினர் மேரிடென்சியா யோன்பின்ரன் | 077 219 8510 |
| 15 | கௌரவ உறுப்பினர் வட்சலாதேவி வசந்தகுமார் | 077 045 3085 |
| 16 | கௌரவ உறுப்பினர் கார்த்திகேசு யோகராசா | 077 020 6382 |
| 17 | கௌரவ உறுப்பினர் K.திவாகரன் | 077 752 0631 |
| 18 | கௌரவ உறுப்பினர் ஹஜ் முஹமட் கபீர் | 076 889 6744 |
| 19 | கௌரவ உறுப்பினர் குலராஜசிங்கம் புவியரசன் | 077 527 8826 |
| 20 | கௌரவ உறுப்பினர் டோறஸ் பிரதீபன் | 077 421 7952 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கதிர்களாக.....


1. வாழ்த்துச் செய்திகள் iii-xi
2. வாசிப்பும் மாணவர் சமுதாயமும் 01
3. தேடலால் தெளிவாகு 02
4. ஆலயமும் புராண படலமும் 04
5. பல் நோய்க்கு சித்த மருத்துவம் 07
6. நூலகத்தின் பயன்பாடு 09
7. தனிமரம் 12
8. விழித்தெழு 13
9. வாசிப்பின் பயன்பாடு 20
10. தேசத்தை அழிக்கும் போதைப்பொருள் 22
11. பீனிச நோய்க்கு சித்த மருத்துவம் 23
12. நமது மந்திரிகள் 25
13. வினாவிடை 25
14. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் 26
15. வாசிப்பு 28
16. விழுமியங்களில் தலைமைத்துவம் 30
17. ஞானிமடமும் தொன்மையும் 33
18. வாழ்வோர் வாழ வளமளிக்கும் நூலகம் 34
19. கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு 36
20. அறிவே ஆற்றல் 38
21. ஒற்றுமையே பலம் 39
22. வாசிப்பை மனதில் விதைப்போம் 41
23. வீதி விபத்தை பாதுகாப்போம் 43
24. உள்ளூராட்சி மன்றங்களால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பொதுப்பயன்பாட்டு சேவைகள் 47




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பும் மாணவர் சமுதாயமும்

ஆசிரியர்
திருமதி. ஜென்சிகுயின்ரா பிரபாகரன்.
கிளி/செல்லையாதீவுஅ.த.க.பாடசாலை.



நவீன கல்வித் தேவைகளுக்கு ஏற்ப மாணவர் சமுதாயத்தை நூல்களை வாசிப்பதற்கு சிறுவயதிலிருந்தே பழக்கப்படுத்துவதுடன் சுய கல்வியின் முக்கியத்துவத்திற்கும் வழிகாட்ட வேண்டும். தற்காலத்தில் இலங்கைப் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தமானது கட்டுருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இவ் அறிவானது கற்போரின் அனுபவத்திலிருந்து கட்டியெழுப்பப்படுகின்றது. சிறந்த வாசிப்பின் ஊடாக நல்ல அனுபவத்தை மாணவர்கள் பெற்றுக் கொள்ளமுடியும். தற்கால தேடிக் கண்டறிதலுக்கான அடிப்படை வாசிப்பாகும்.

இத்தகைய நிலையில் வாசிப்பு என்பது மாணவர் சமுதாயத்தில் படிப்படியாக விலகிச் செல்லும் வாசிக்கும் பழக்கத்தை மீண்டும் நிலை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இன்று நாம் வாழும் இச் சமுதாயத்தில் நற் பண்புகள் நலிவடைந்து வருகின்றன. கடந்து செல்லும் ஒவ்வொரு கணத்திலும் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இலக்கிய நூல்களைப் போல ஏனைய நூல்களை வாசிப்பதில் மக்கள் ஆர்வம் நலிவடைந்து வருவது இதற்கு ஒரு காரணமாகும். நாடொன்றின் எதிர்காலம் சுபீட்சமாக இருப்பதற்கு அந்தநாட்டு மக்கள் நன்கு எழுத, வாசிக்க தெரிந்தவர்களாகவும், புத்திசாலிகளாகச் செயற்படக் கூடியவர்களாகவும் இருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

இன்றையமாணவர் சமுதாயம் நவீனதொடர்பு சாதனங்களின் ஊடாகத் தகவல்களை தேடுவதில் ஆர்வம் காட்டி வருவதால் நூல்கள் வாசிப்பதில் அதிகளவில் விலக்கிவருகின்றனர். வாசித்தல், தகவல் தேடுதல், மனமுதிர்ச்சி போன்றன சமூகத்தின் முக்கிய அம்சங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை வாசிப்பது தியானத்தை ஒத்ததாகும். இதனை உணராத வகையில் தான் இன்றைய மாணவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

நூல்களை வாசிப்பதன் மூலம் அடக்கத்துடன் கூடிய வித்துவான்கள் பண்டிதர்கள் மற்றும் ஞானிகள் உருவாவதைச் சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ளது. அத்தோடு வாழ்விற்கான அனுபவங்களையும் ஆத்ம ரீதியிலான அனுபவங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். ஆக்க பூர்வமான சிந்தனையுடனும் நல்லொழுக்கத்துடனும் கூடிய சமதர்மங்களுக்கு மதிப்பளிக்கும் அபிமானம் மிக்க செயற்பாட்டு வீரர்களாக மாற்றுவதற்கு வாசிப்பு பழக்கம் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை இன்றைய மாணவர் சமுதாயம் உணர்ந்து செயற்பட வேண்டிய கட்டாய கடமையாகும்.

மேலும் சரியான தீர்மானங்களை எடுத்தல், தகவல் தேடுதல், நடுநிலைவகித்தல், முகாமைத்துவம், நிர்வாகம் போன்றவற்றுக்கும் தேவையானஅறிவையும் இந்த உன்னதமான பழக்கத்தின் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும். வாசிப்பானது வளமான வாழ்விற்கு அடித்தளமாக அமைகின்றது. வாசிப்பை நேசி அதனை சுவாசி எனும் வகையில் ஒவ்வொரு மாணவரும் செயற்பட வேண்டும்.

இன்றைய மாணவர் சமுதாயத்திற்கு வாசிப்பை ஊட்டி வளர்க்க வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் காணப்படுகின்றது. இதனை இன்றைய வளர்ந்து வரும் சமுதாயத்தை வழிப்படுத்த வேண்டும். வாசிக்கும் சமுதாயத்தில் ஓர் ஆசிரியர் பின்வரும் வாக்கியங்களை வகுப்பவர்களாக காணப்படுவர்.


- தனது வாசிப்பின் மூலம் அறிவைத் தேடிக் கொள்வார்.
- தனது மாணவர்களை வாசிக்கத் தூண்டுவார்.
- பொது நூலகங்களுக்கு மாணவர்களை அழைத்து செல்வார்.
- வாசிப்பு தொடர்பான போட்டிகளில் மாணவர்களை பங்கு பெற செய்வார்.
- பாடசாலை நூலக அபிவிருத்தியில் பங்கெடுத்துக் கொள்வார்.
- தனது துறைசார் புதிய நூல்களின் வருகை மற்றும் பயன் மிக்க நூல்கள் பற்றி அறிந்து கொள்வார்.
- தனது வீட்டில் நூலக மொன்றை பேணிக் காப்பார்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலமாக முன்மாதிரியாக வழிகாட்ட வேண்டும்.

தகவல்களினாலும் அறிவானாலும் நிரப்பி அந்த அறிவைப் பெறுவதை இலகுவாக்கும் தொடர்பு சாதன வலையமைப்புடன் கூடிய மனித சரித்திரத்தின் அபூர்வமானதொரு யுகத்தில் வாழ்வதற்கு நாம் மிக அதிகஷ்டம் செய்தவர்களாவோம். இந்த அறிவை பெற்று எமது தனிப்பட்ட வாழ்வை ஒளிமயமாக்குவற்கு வாசிப்பு மிக முக்கியமாகும். வாசிக்கத் தெரிந்த பருவம் தொடக்கம் இறப்புவரை மனிதனின் வாசிப்பு தொடர்ந்து செல்கின்றது. இதனை எண்ணி வளர்ந்து வரும் மாணவர் சமுதாயம் வாசிப்பை கல்வித் தேவைகளுக்கு ஏற்ப சிறுவயதில் இருந்தே பழக்கப்படுத்துவதுடன் சுய கற்றலில் ஈடுபட்டு பொதுக் கல்வி அடைவுமட்டத்தில் சிறந்த பெறுபேற்றைபெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடலால் தெளிவாகு

பள்ளிப் பருவம் கண்டோரே
கள்ளம் இல்லாப் பிஞ்சுகளே
அறிவை வளர்க்க முயன்றிடுவீர்
நூல்கள் உமக்கு கைகொடுக்கும்

பாடத்திட்டம் பள்ளியில் படிக்க
ஏனைய நேரம் நூலகம் செல்ல
நல்ல நூல்கள் நீர் கற்றால்
வல்லராக வளர்வீர் நீர்

கண்டதும் கற்றிடப் பண்டிதராவாய்
வாசிப்பே உன்னைப் பூரணமாக்கும்
சிந்தனைஆற்றலை நீ வளர்க்க
சிந்திடும் நூல்களை நீ கற்பாய்

கற்பதில் ஏதுமே குற்றமில்லை
மற்றவர் மதித்திட நூலறிவாய்
பயன்தரு நூல்கள் நூலகத்தில்
இருப்பதை நீயும் உணர்ந்திடுவாய்

தேடல் உன்னைத் தெளிவாக்கும்
தேர்வில் இல்லை உன்னறிவு
தேடித் தேடி நீ வாசி-அதில்
தேர்வாய் நல்ல மாணவனாய்

வயது ஏதும் தடையில்லை
நிலமது உழுதால் பயிர் விளையும்
விரும்பி நீயும் கற்றிட்டால்
விளைநிலம் நீயே உணர்வாயே.

**திருவாட்டி சூரியகுமாரி இராசேந்திரம்**
அதிபர், கிளி/பூநகரி நல்லூர் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி நல்லூர் ஆலங்கேணி மேளாய் ஸ்ரீ கண்ணகை அம்பாள்
# ஆலயமும் புராண படலமும்



தமிழ் மரபின் பாரம்பரிய சொத்துக்களாக விளங்குபவை கலைகளாகும். இக்கலைகள் பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை பேணிப் பாதுகாக்க வேண்டிய ஒன்றாகக் காணப்படுகின்ற போதிலும் ஆங்காங்கே அருகிப்போகின்ற நிலைமையே பெரிதும் உள்ளது. அதாவது நாகரீகம் என்ற போர்வையில் மேல்நாட்டு மோகத்தால் இவை மழுங்கடிக்கப்படுவதுடன் கடந்த காலஅசாதாரண சூழ்நிலைகளும் கலைகள் அழிவடைவதற்குக் காரணமாய் அமைகின்றது. அழிவடைந்த கலைகளை மீண்டும் துளிர்விட்டெழ வைப்பது இன்றைய இளந் தலைமுறையினரின் தலையாய கடமையாகும்.

கலைச் செயற்பாடுகள் அனைத்தும் பெரும்பாலும் ஆலயங்களுடன் இணைந்ததாகவே இருந்து வந்திருக்கின்றன. ஆலய விழாக்களிலே கூத்துக்கள் நிகழ்த்துதல், புராணப்படிப்பு கதாப்பிரசங்கம் முதலியனநடைபெற்று வந்துள்ளன. மேற்குறிப்பிட்ட கலைகள் பயிற்சிவகுப்புக்கள் மூலம் கற்காது குருசிஷ்ய முறையிலேயே அதாவது கையளிப்புப் பாரம்பரியமாகவும், மற்றும் செவிவழியாகக் கேட்டும், சேர்ந்து பங்காற்றுதல் மூலமும் இவை மக்களிடையே வழக்கில் இருந்துள்ளன.

புராணபடலம் என்பது ஒருவர் புராணக் காவியத்தினுடைய பாடல்களைப் பார்த்துப் பாட அதனைச் செவிமடுத்து பொருளைத் தெளிவுறக் கூறுதலாகும். புராணபடலத்தில் இருவர் பங்குபெறுவர். பாடலை மெட்டமையப் பாடுவார் ஒருவர் அப்பாடலின் பொருளைக் கூறுவர் இன்னொருவர் பாடலைப் பாடுபவர் ஒரு பாடலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாக ஒரு தடவை பாடி முடித்த பின்பு அதனை ஒவ்வொரு வரியாக மீண்டும் பாடற் பிரிப்பு செய்யப்படும். அவ்வாறு பிரித்துப் பாடும் போது அதன் பொருளைச் சபையோருக்கு விளக்கமாகக் கூறுதல் வேண்டும் பாடற்பிரிப்பின் தன்மைக்கு ஏற்பவே பொருள் விளக்கிக் கூறுபவரின் செயற்பாடு அமையும். இவ்வாறு பொருள் கூறுபவரை "பயன் சொல்பவர், பயன்காரர்" எனவும் அழைப்பார்

இலங்கையிலே புராணபடலம் ஓதப்படும் மாவட்டங்களாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம் இவற்றிலும் முக்கியம் பெறுவது யாழ்ப்பாணம் ஆகும். அதற்கு அடுத்தபடியாகக் கிளிநொச்சியைக் குறிப்பிடலாம் அவற்றிலும் பூநகரிப் பிரதேசம் சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

ஆலயங்களை ஆதாரமாகக் கொண்டமைந்த பூநகரியின் பண்டைக்காலத்தில் புராணபடலம் ஓதப்பட்ட ஆலயங்களாக நல்லூர் ஆலரஞ் சாட்டிப்பிள்ளையார் ஆலயம் செட்டிய குறிச்சி திகிரி விநாயகர் ஆலயம், நல்லூர் மேளாய் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம், செல்லையாதீவு கண்ணகை அம்மன் ஆலயம், ஆலங்கேணி கட்டுக்கரை வீரகத்திவிநாயகர் ஆலயம், நல்லூர் ஸ்ரீபலகத்தறை முருகன் ஆலயம், ஆலங்கேணி ஸ்ரீ பலகைக்கந்து சித்திவிநாயகர் ஆலயம், முழங்காவில் ஸ்ரீ செல்வ யோக சித்தி விநாயகர் ஆலயம், ஜெயபுரம் சோலை ஸ்ரீ முருகன் ஆலயம் என்பவற்றை சிறப்பாகக் குறிப்பிடலாம். எனினும் புராணபடலம் ஓதும் முறை கலையார்வம் மிக்கவர்களின் பற்றாக்குறையால் இன்று தளம்பல் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

மேற்கூறப்பட்ட ஆலயங்களில் இன்றும் தொடர்சியாக புராணபடலம் ஓதப்படும் ஆலயங்களாக விளங்குபவை மேளாய் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம், நல்லூர் ஸ்ரீ பலகத்தறைமுருகன் ஆலயம், செட்டியகுறிச்சி திகிரி விநாயகர் ஆலயம் என்பன மட்டுமே. இவற்றுள்ளும் மேளாய் ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தில் இன்றும் புராணபடலம் நடைபெறுவது சிறப்புக்குரியதொன்றாகும். இதற்கு தூண்களாக அமைவன அவ்வூர் சமயப்பற்றுள்ள மக்களும் சமயமரபைக் கைவிடாது அடுத்தடுத்த சந்ததியினரிடையே மணம்பரப்பிச் சென்ற மூத்தோர்களும் ஆவர்

பூநகரியில் புகழ் பூத்த ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் மேளாய் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் பண்டைக்கால புராணபடல ஆதிகுருவாக விளங்கியவர் வேலுப்பிள்ளை விதானையார் என்பவர் ஆவார் இவரின் பின் இவரது சீடர் பூசாரி செல்லப்பா என்பவரும் பின்னர் இவரது சீடரான பூசாரி கார்த்திகேசு என்பவரும் புராணபடலம் ஓதுவதில் முக்கியத்துவம் பெறுகின்றனர். இவரின் பின் கந்தையா அருணாசலம் என்பவரும் இவரது தம்பியான கந்தையா பசுபதி என்பவரும் புராணபடலம் ஓதுவதில் (பயன் சொல்பவர்களாக) சிறப்புற்று விளங்கினார். இவர்களின் வழித் தோன்றல்களாக கந்தையா அருணாசலம் என்பவரிடம் சதாசிவம் பாலசுப்பிரமணியம், விநாசித்தம்பி தனபாலசிங்கம் என்போரும் கந்தையா பசுபதி என்பவரிடம் கந்தப்பு ஆனந்தராசா, காசிநாதர் மகேஸ்வரன் ஆகிய இருவரும் 1987ம் ஆண்டு காலப்பகுதியில் பயன் பழகி இவ்வருடமே இவர்களது கன்னியமர்வு மேளாய் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் திருவாதவூர் அடிகள் புராணத்திற்கு பொருள் கூறும் நிகழ்வு இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைத் தொடர்ந்து குலேந்திரராஜா குகேந்திரன், கந்தப்பு நகுலேஸ்வரன், வேலுப்பிள்ளை கந்தப்பு ஆகியோர் கந்தையா பசுபதியின் சீடர்களாக பயன் பழகிப் பொருள் கூறத் தொடங்கினர். இவர்களது கன்னியமர்வாக திருவாதவூரடிகளின் புராணத்திற்கு 1999ம் ஆண்டு இவ்வாலயத்திலேயே இடம்பெற்றது. இவர்களில் காசிநாதர் மகேஸ்வரனும், கந்தப்பு நகுலேஸ்வரனும் தற்போது புலம் பெயர் தேசத்தில் இறைபணி தொடர ஏனைய அனைவரும் திருவாதவூரடிகள் புராணத்திற்குப் பொருள் கூறுபவர்களாகத் தற்போதும் தம் சமயப் பணியை இடையறாது தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

இவர்களில் கந்தபுராணத்திற்கும் பொருள் சொல்பவர்களாகத் தற்போதும் துலங்குபவர்கள் கந்தையா பசுபதி, சதாசிவம் பாலசுப்பிரமணியம், கந்தப்பு ஆனந்தராசா ஆகியோர் மட்டுமே . இவர்கள் பயன்காரர்களாகத் திகழ்ந்தபோதிலும் பாடலைப் பாடுவதிலும் வல்லமை பொருந்தியவர்களாகக் காணப்பட்டனர். இப் பயன்காரர்களுக்கு இணையாக பாடலைப் பாடுபவர்களாக நாகரத்தினம் கதிரவேலு, க.பரமசாமி, S.கோபாலதேவன், சுப்பையா செல்வானந்தம், குமாரசாமி சுப்பிரமணியம், கந்தப்பு ஜெகதீஸ்வரன், குமாரசுவாமி சண்முகலிங்கம், நாகரத்தினம் கணபதிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை பரமேஸ்வரன், S.நல்லையா, சிதம்பரப்பிள்ளை சிவநாதன், நல்லையா மனோகரன் ஆகியோர் இன்றும் பாடலைப் பாடும் இசைவாணர் மரபிலே திகழ்ந்து சைவமும் தமிழும் பூநகரி நல்லூர் ஆலங்கேணியில் மணம் பரப்பப் பாடுப்பட்டுக்கொண்டிருப்பதை காணலாம்.

பண்டைக்காலக் "கந்தபுராணக் கோவில்" எனச் சிறப்பிக்கப்பட்ட நல்லூர் ஸ்ரீ பலகத்தறைப் பிள்ளையார் ஆலயம் தற்போது பிள்ளையாரின் அருட்கடாற்ச அனுமதியுடன் பெயர் மாற்றம் செய்யப்பட்டு மூலமூர்த்தியாக முருகனின் அம்சமான வேல் வைக்கப்பட்டுள்ளது. அவ் ஆலயம் பூநகரி நல்லூர் ஸ்ரீ பலகத்தறை முருகன் ஆலயம் என்ற பெயருடன் விளங்குவது குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்தில் கந்தபுராணம் ஆறு காண்டங்களாகத் தொடர்ச்சியாக ஓதப்பட்ட ஆலயமாக 1958, 1960ம் ஆண்டு காலப்பகுதியில் விளங்கியுள்ளது.


பூநகரிப் பிரதேசத்திலேயே மிகச்சிறப்புப் பெற்ற "கந்தபுராணக் கோவில்" என்னும் பெயர் தாங்கிய ஆலயமாக நல்லூர் ஸ்ரீ பலகத்தறை முருகன் ஆலயமும், முதன் முறையாக கர்ப்பக் கிரகத்திற்கு முடியிடப்பட்டு ஓர் கட்டட அமைப்பைக் கொண்ட ஆலயமாக நல்லூர் ஆவரசஞ்சாட்டி பிள்ளையார் ஆலயமும், முதன் முறையாக திருவிழாவின் போது தேரோட்டிய ஆலயமாக செட்டிய குறிச்சி திகிரி விநாயகர் ஆலயமும் விளங்குவது பூநகரியின் பெருமைகளை எடுத்தியம்புகின்றன. எமது பிரதேசகலை, கலாச்சாரம் மற்றும் விழுமியப் பண்பாடுகள் மீண்டும் தழைக்கவும் சமயம் தமிழ் மணம் பரப்பவும் ஒன்றுபடுவோம்.

**திருமதி. றாஜினி ராஜேஸ்கண்ணா,** B.F.A, PGDE
இசையாசிரியர்
கிளி/நாச்சிக்குடா அ.மு.க.பாடசாலை, பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் நோய்க்கு சித்த மருத்துவம்



"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி" என்றபழமொழியை நாம் நினைவு கூற வேண்டும். ஆலமரத்து விழுது கொண்டு தினமும் பல் துலக்கினால் பற்கள் மிளிரவும், உறுதியாகவும் காணப்படும். வேல் என்று சொன்னால் வேலாமரம் என்ற பெயரில் பல மூலிகை மரங்கள் உள்ளன. வேலா, கருவேலா என்ற பல மூலிகைகள் மரமாக வளர்ந்து இருக்கும். இலைகளின் பட்டை, குச்சி, பூ, இலை மருந்துகளாக பயன்படுகின்றது.

வேலா மரத்தின் ஓரளவு தடித்த குச்சிகளை சுமார் 6" அங்குலம் நீளமுள்ளவைகளாக கத்தரித்து குச்சிகளின் மேலுள்ள தோல் பட்டைகளை நீக்காமல் அப்படியே ஈரத்துணிகளில் சுற்றி பாதுகாப்பாக வைத்தால் கருவேலாங்குச்சி சீக்கிரத்தில் ஈரத்தன்மையை இழந்து விடாமல் இருக்கும்.

ஒரு குச்சியை எடுத்து தினந்தோறும் அதிகாலையில் பல் துலக்கவேண்டும். சுமார் ஒரு inch வரை குச்சியை மென்று துலக்கலாம். பிறகு 1 inch நீளத்தை வெட்டி விட்டு மறு நாளும் அதை பயன்படுத்தலாம்.

கருவேலாங்குச்சி துவர்ப்புத் தன்மை உடையது. பற்களில் உள்ள ஈறுகளின் வீக்கம், பற்களின் தாடைகளின் உஷ்ணத்தன்மை, பற்களின் ஈறுகளிலிருந்து இரத்தம் வடிதல் போன்றவற்றைநிறத்தும். பற்கள் மேல் உள்ள எனாமல் தன்மையும் இழக்காமல் இருக்கும். பற்கள் கூசும் தன்மை இருக்காது. பற்கள் பழுப்பு நிறமாகவும் மாறாது.

எனவே கருவேலன் குச்சி மூலம் பற்கள் துலக்குவது சித்த மருத்துவத்தில் சிறந்த முறை ஆகும். வாரம் ஒரு முறை தேவையான அளவு வேப்பம் குச்சியை கொண்டு வந்து பல் துலக்க வேண்டும். பற்களில் உள்ளகிருமிகள், பற்களின் இடுக்குகளில் தேங்கியுள்ள உணவுப் பொருட்கள் நாளடைவில் பூச்சிகள் உண்டாகி கெடுதலை ஏற்படுத்தும். இவ்வாறு வாரம் ஒருமுறையாவது வேப்பம் குச்சியைக் கொண்டு பல் துலக்கும் போது பற்களின் ஈறுகளில் உள்ள உணவுப் பொருட்கள் அகற்றப்படுகின்றது.

வேப்பம் குச்சியானது கசப்புச் சுவையுள்ளமையினால் வாயிலுள்ள கசப்பு நீரினையும் வெளியேற்றி விடும். தினமும் இரவில் தூங்கும் முன் நாக்கிலுள்ள வழுவழுப்பான தேவையில்லாத கோழையை நாக்குவழிப்பான் மூலம் அகற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் கூச்சம் உள்ளவர்கள் புதினா விதையை வாயிற் போட்டு பல் கூசுகின்ற பல்லினால் கடித்து மெல்ல பல் கூச்சம் தீரும்.

சோற்றுப்பு ஒரு பிடி எடுத்து அரைப்படி தண்ணீரில் போட்டு ஆழாக்கு தண்ணீராக சுண்டக் காய்ச்ச வேண்டும். இதனை பற்களின் ஈறுகளில் இருந்து இரத்தம் வடியும் நிலையில் வாய் கொப்பளித்தால் பல் வலி, இரத்தம் வடிதல் போன்றன தீரும்.

1. பல் நோய் தீர—மிளகு, உப்பு, கற்பூரம் இம் மூன்றும் சமஅளவு இடித்து வஸ்திரகாயம் செய்துஅல்லதுபொடிசெய்து கொண்டு பல் துலக்கி,வெந்நீரில் வாய் கொப்பளித்து வந்தால் பல் நோய் தீரும்.
2. கண்டங்கத்தரி சமூலத்தை சுட்டு கரியாக்கி மாலை வேளையில் பல் துலக்கி வரபல் நோய் தீரும்.
3. காலையில் கடுக்காயும், படிகாரமும் சம அளவு எடுத்து கசாயம் செய்து காலை மாலை வாய் கொப்பளிக்க பல் நோய் தீரும்.
4. தாளிசபத்திரி இலையை சுத்தம் செய்து நிழலில் உலர்த்திப் பொடி செய்து பத்திரப்படுத்தி வைக்கவும். இதனை சிறிதளவு எடுத்து பல்வலி உள்ள இடத்தில் போட பல் வலி தீரும்.
5. நன்னாரி வேரைக் கசாயம் செய்து வாய் கொப்பளித்து வர பல் வலி தீரும்.

மாணிடராகிய எமக்கு பற்களின் வரிசையும் மென்மையும் வெண்மையுமே மகத்தான தோற்றமளிக்கிறது. எனவே எமது இந்த எளிமையான முறைகளைப் பின்பற்றி பல் நோய்களிலிருந்து விடுபட்டு நல்வாழ்வு வாழ்வோமாக!

**DR.P.Mathiyarasi,**

(Ayurvedic medical officer)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் கற்றல் - கற்பித்தலுக்கு நூலகத்தின் பயன்பாடு.

"ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா"
"அச்சம் தவிர் ஆண்மை தவறேல்"
சீர் பெற்று வாழ்வதற்கே உன்னைப் போல் செல்வம் பிறிது முண்டோ?

இவ்வாறு சிறுவர்களின் பெருமையை பல்வேறுபட்ட பரிணாமங்களில் பாடியுள்ளார் பாரதியார். கல்விச் சிந்தனையுடன் பிறந்த பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் எவ்வாறு நூலகங்களை பயன்படுத்தி சிறந்த கற்றல் கற்பித்தலை வழங்கலாம் என்பது பற்றி ஆராய்வோம்.

"வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்." என்பது ஆன்றோர் வாக்கு. மனித இனம் மொழிப் பயன்பாட்டை அறிந்த நாள் முதல் வாசிப்பு பழக்கமும் ஏற்பட்டிருக்கலாம் என்பது ஆன்றோர் வாக்கிலிருந்து பெறப்படும். மனித நாகரிகம் வளர்ச்சியடைந்து, அறிவாற்றல் மிகுவதற்கும் வாசிப்பதற்கும் பிரதான இடமுண்டு. ஏனெனில் ஆரம்பகாலத்தில் சின்னங்கள், குறியீடுகள், உருவங்கள் என்பவற்றின் வாயிலாகவே மனிதன் பேசக் கற்றுக் கொண்டான். அவ்வழியாகவே மொழிபிறந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சான்று இன்றும் முன்னிலைப் பள்ளிமாணவரின் ஆரம்பநிலையும் அவ்வழி அமைந்திருப்பதே ஆகும்.

எழுத்து மொழிப்பயன்பாடு வந்த பின்பே மாணவருக்கான கற்றல், கற்பித்தலில் மிகத் துரிதமான வளர்ச்சி ஏற்பட்டது, பிற்காலத்திலேற்பட்ட இம்மாற்றம் மனித வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. உண்மையே இவ்வாறு "பாலபருவத்திலிருந்து விருந்தர் வரையும்" நூலகம் சென்று நூல்களை வாசித்து மனிதன் வளமுடன் வாழ பல வழிகளில் உறுதுணையாக உள்ளது.

மாணவரின் வாசிப்பு அறிவை வளர்க்குமன்றி நூலகத்தில் கற்றலை மேற்கொள்ளும் போது மனித பண்புகளை வளர்த்தல், மனமகிழ்ச்சி, நின்மதிதருதல், ஓய்வு நேர உபயோகம், தனிமை, பயம், சோகம், நோய் என்பவற்றை போக்கி புத்துணர்வும் புதுப்பலமும் அளிக்கவும், நண்பனாக நல்லாசிரியராக நீதிகள்,அறிவுரைகளை வழங்குதல் போன்ற உணர்வுகளை சமநிலைப்படுத்தி பொறுமை, அன்பு என்ற பண்புகளை வளர்க்கும். நூல்கள் மாணவரின் மனித வாழ்விலும் பாரிய மாற்றத்தை கற்றல், கற்பித்தலில் வெளிப்படும் ஐயம் இல்லை.

எத் தொழிலை செய்தாலும் அது சிறப்புற்று விளங்க வாசிப்பு அவசியம். காரணம் இன்று எல்லாத் தொழில்களின் நன்மை, தீமை பற்றிய பற்பல நூல்கள் "வெளிவந்தவண்ணம்" இருக்கின்றன. அவற்றுள் மாணவர்களுக்கு எதிர்கால தொழில் வழிகாட்டலுக்கு தேவையான விடயங்கள் கிடைப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

"நூலகங்களில் கைக்கொள்ளப்படும் இந்த மௌனவாசிப்பு ஆனது" ஏறக்குறைய தியானம் செய்வதை ஒத்ததாகும். காரணம் குறுகிய நேரத்தில் அதிக விடயங்களை வாசித்து தெரிந்து கொள்வதனால் அவர்களுடைய ஐம்புலன்களுமே ஒருமுகப்பட்டு செயற்படும். இதனால் உடலும் உளமும் ஒரு சேர நல்வழிப்படுத்தப்படுகிறது. இவ்வாறான செயற்பாடு மூலம் ஆசிரியரின் ஏனைய வழிகாட்டல்களுக்கு வழிகாட்டியாக அமைகின்றது.

மேலும் நூலகங்களில் "மாணவர்கள் குழுக்களிலும் சேர்ந்துசிலவிடயங்களைகற்றுக் கொள்ள ஒரு சந்தர்ப்பமாக இவ்விடம் அமைகின்றது." எனும் விடயத்தை ஆராய்வோம் ஆனால் இச் சந்தர்ப்பத்தில் மாணவர்கள் குழுக்களாக செயற்படவும், சிந்தனாசக்தி ஒருமுகப்படுத்தப்படவும் தனித்தனியாக திறனும் ரசிப்புத்தன்மையும் மொழியாற்றலும் கூட விருத்தியடையும். இவ்வாறு செயற்படும் வேளையில் ஆசியரின் கற்றல் கற்பித்தலுக்கு நூலகப் பயன்பாடுமிகவும் பயனுடைய கருவியாக மாற்றமடையும்.

மேலும் "கண்டதுகற்கப் பண்டிதன் ஆவான்" என்ற முது மொழிக்கொப்ப எல்லா விதமான நூல்களையும் நாம் வாசிப்பதிலும் ஓர் அர்த்தம் இருக்கின்றது. வகுப்பறையில் குறிப்பிட்ட விடயப்பரப்பினை மாணவன் கற்றுக் கொள்ளமுடிகின்றது. நூல் நிலையம் சென்று எல்லாவிதமான நூல்களையும் வாசித்தே தெரிந்து கொள்ளலாம். இதன் மூலம் மாணவன் பரந்த ஆழமான அறிவைப் பெற்று

"பூமகளின் புன்னகைபோல்

பூத்திடுவோமே–கம்பன்

பாமணக்குந் தமிழினைப் போல்

பரி மளப்போமே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடலுக்கு அமைவாக நூல் நிலைய வாசிப்பு ஆசிரியரின் கற்றல் கற்பித்தலுக்கு உற்ற தோழனாக உதவும் என்பதில் ஐயம் இல்லை. அறிவாற்றலும் புத்திசாதுரியமுள்ள "நம் மாணாக்கர்" இதனால் நன்மையே பெறுவார். பிறரையும் நல்வழிப்படுத்துவர். "அவ்வப்பொழுதிலும் தவப்பொழுதுமே" என்ற ஆன்றோர் வாக்குக்கொப்ப, ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் செலவிட உதவுவதோடு ஓய்வு நேரத்தில் மாணவர்கள் அரட்டை அடிப்பதும், பிறருடன் வீண் வார்த்தை பேசிச் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதிலும் பார்க்க நல்ல நூல் வாசிப்பதில் அப்பொழுதை கழித்தோமானால் அது "வளமான வாழ்வுக்குகந்த செயலாகும்" இவ்வாறான சிறந்த பண்டிதனை தருவது இவ் நூலகமாகும்.



பல்கழக சிறந்த பட்டதாரியை உருவாக்கு வதிலும் இன்றைய தேடல் முறை கல்விக்கமை வாக தனது பாடம் சம்மந்தமான புதிய விடயங்களை தேடுவதும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதும் சிறந்த முறையில் பரீட்சையை எதிர் கொள்ள எளிதாக உதவுவதோடு சிறந்த நூல்களை நாம் படிக்கும் போது "தூக்கமும் கண்களைத் தானே தழுவிக்கொள்ளும்" என்ற ஆன்றோரின் வாக்குக்கேற்ப மனிதவாழ்வில் ஒருநாள் ஆரம்பம் முதல் தூங்கும் வரையும் நூல்களை வாசிக்கும் போது அவை எமக்கு துணைபுரிவது தெட்டத் தெளிவாக உணரும் படியாக உள்ளது.

அடுத்து உயர் வகுப்பு மாணவரின் கற்றலில் எவ்விதம் வாசிப்பு பயனளிக்கின்றது என்பதை நோக்குவோமானால் இவர்கள் பாடசாலைகளில் குறிப்பிட்டநேரத்தில் பாடங்கள் பற்றிய அறிவையும் பெற்றுக் கொள்ள காலம் நேரம் போதாது. ஆதலின் மேலதிக அறிவைப் பெற அவர்கள் சுய முயற்சியினால் நூல்களைப் பயன்படுத்தி தேவையான மேலதிக கற்றல் விளைவு பெற நூலகம் அவசியமாகும்.

எனவே இவ்வாறு சிறந்த நூலக வாசிப்பானது மாணவரின் கற்றல் கற்பித்தல் மட்டுமன்றி ஆசிரியரின் கற்றல் கற்பித்தலுக்கு பெரிதும் துணை புரிகின்றது. "தொட்டிற்பழக்கம் சுடுகாடுவரையும்" எனும் பழமொழிக்கொப்பாக இளமையிலே நூலகம் சென்றுவாழ்நாள் முழுவதும் நற்பயன் தந்து "முதுமையிலும் தனிமையும் வாழ்வின் வெறுமையும் போக்கும் உயிர்த்தோழனாகவும் எம்மை வளமாக வாழவைக்கும் இடமாக" நூலகத்தையே கூறலாம் என்பதில் ஐயமில்லை.

நன்றி

**திருமதி. சுவிற்றிரேகா மகிந்தன்.**
கிளி/பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்,
விசேடகல்விஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமரம்

சண்ட மாருதம் மோதி மழைவெள்ளம் தப்பி
சருகுத் திரை விலக்கி பகலொளியில் சூடேறி
தானே போராடி வேரோடு தன் உணவை தான் சமைத்து
பூண்டாய் நிமிர்ந்து தனிமரமாய் உயர நாளாகும்.

சுவை பார்க்க வரும் மாடு இலை கடிக்கும்
இதனாலே செடி முள் சுமக்கும்
ஒரு நூறு குருவி வந்து பழம் கொத்தும்
அவை இளைப்பாறும் பெருமரத்தின் கதைபேசும்

அது போல நீ வளர வேண்டும் என்றும்
உன் பெருமை அங்குரைப்பது உறுதி என்றும்
உயர்ந்தால் தான் உலகெல்லாம் அறியும் என்றும்
கனிகொண்டுஅறிவுரைகள் கூறிச் செல்லும்

பெருமரமோ சிறுசெடியைக் காண்பதில்லை
கதிரொளியை தனைத்தாண்டி விடுவதில்லை
தன்னை ஒத்த பெருமரங்கள் தாழ்வைப் பேசி
தன்னைப் போல யாரென்று கிளைகள் வீசும்

அம்மரத்தின் கிளையிருக்கும் குருவிச்சையும்
அதனடியில் படர்ந்தேறும் சிற்றிலைக் கொடியும்
நன்மையே நன்மையே எனப் போற்றி
உயர் மரத்தின் பெருமைதனை உறிஞ்சி வாழும்

செடி வளர்ந்து மரமாகி நிற்கும் போதும்
கிளைபரப்பி குளிர் நிழலைக் கொடுக்கும் போதும்
அருகிருக்கும் பறவையெல்லாம் அதனைநோக்கி
வளர்கின்ற செடியென்றே விளித்து நிற்கும்
தாம் காண வந்து வளர்ந்த செடி தம்மை விஞ்சி
தனிமரமாய் உயர்ந்திருக்கும் காட்சிகண்டும்
தாம் பற்றும் மரம் போல இல்லை என்று
குருவிச்சை கொடியெல்லாம் குறைகள் கூறும்

பார் புகழும் பறவையொன்று ஒருநாளில் வந்து
புது மரத்தின் அருங்கனிகள் சுவைத்து நயக்க
தான் சுவைத்து சுவையறியா ஊர்ப்பறவை
பாரினிலே உயர்ந்த கனி இனிவென்றுரைக்கும்.

**ஜீ. ஐங்கரன்**
*தரம் - 12*
*யா/இந்துக்கல்லூரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழித்தெழு

நடராசா கோபிராம்,
ஆலங்குழாய் வீதி,
சண்டிலிப்பாய்.

பாத்திரங்கள்

சுவாமிநாதன் - தகப்பன்

செல்லம் - தாய்

ரஞ்சன் - மகன்

ராமு- வகுப்பாசிரியர்

தினேஸ் - ஆசிரியர்

## காட்சி-01

கதாபாத்திரங்கள் :- சுவாமிநாதன், செல்லம், ரஞ்சன்

இடம் :- சுவாமிநாதரின் வீடு

காலம் :- காலை

(திரை விலக முன்னர் மேடையில் வீட்டிற்குரிய காட்சிப்பொருட்கள் வைக்கப்பட்டு ஒளிகள் பாச்சப்படுகின்றன திரை மெல்ல விலகுகிறது. மேடையின் பின்னணியில் பூபாள இசை ஒலிக்கிறது மேடையின் மத்தியில் கட்டிலும் மத்தி இடதில் சாய்கதிரையும் அதில் சுவாமிநாதனும் அவரருகில் ஒரு றேடியோவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது

சுவாமிநாதன் :- (கதிரையில் ஆடியபடி) செல்லம்... செல்லம்...

செல்லம் :- ஓம். வாறன்!

(சுவாமிநாதன் மெல்லச் சரிந்து அருகிலுள்ள றேடியோவை போட்டு அலைவரிசை மாற்றுகிறான்.)

செல்லம் :-என்னப்பா... (தனது கையால் நெற்றி வியர்வை துடைத்தபடி)

சுவாமிநாதன் :- இல்லை.... கொஞ்சம் தண்ணி கொண்டுவாவன்.

(செல்லம் சமயலறைக்கு சென்று தண்ணீர் எடுத்து வந்து சுவாமிநாதனிடம் கொடுத்தார். சுவாமிநாதன் தண்ணீரைஅருந்திவிட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டியே... செய்தியை நாட்டில் எல்லாத்திலையும் வேறுபாடு, சமயம் - சாதி-மொழி என எல்லாத்திற்கும் வேறுபாடு காட்டுறாங்கள்.

செல்லம் :- நீங்கள்! உந்தத் தேவையில்லாக் கதையை ஏன் கதைக்கிறியள் பேசாம இருங்கோ!

சுவாமிநாதன் :- இஞ்சே! ஏன் இன்னும் ரஞ்சன் ஒழும்பேல்லையோ! ஸ்கூலுக்குநேரம் ஆச்செல்லோ...

செல்லம் :- இண்டைக்கு, பள்ளிக்கூடத்தால கல்விச் சுற்றுலா போறார்களாம் அதுதான் இவன் போகல.

சுவாமிநாதன் :- ஏன்? போகல...

செல்லம் :- காசு ஐந்தாயிரம் ரூபாயாம்!

(சுவாமிநாதன் கதிரைஆடுவதை நிறுத்தி மெல்ல நிமிர்தல்)

சுவாமிநாதன் :- அவ்வளவு காசுக்கு நாங்கள் எங்கபோறது நான் செய்யுறதோ மீன் பிடித்தொழில். (வாய் புலம்புதல்)

செல்லம் :- (ஏக்கத்துடன்) நீங்கள் இண்டைக்கு கடலுக்கு போகலையோ?

சுவாமிநாதன் :- எனக்கு கொஞ்சம் தலைவலியாய் கிடந்திச்சு அதுதான்..

செல்லம் :- ஏதாவது செய்தால் சொல்லுங்கோ டொக்டருட்ட போவம்!

சுவாமிநாதன் :- நீங்கள் போங்கோ! எனக்கொண்டுமில்லை...

(செல்லம் திரும்பி சமயலறைக்குச் செல்ல கதிரையிலமர்ந்தபடி தனது தொழிலையும் மகனையும் பற்றி எண்ணுகிறான்.)

(சிறிதுநேரம் கழித்து ரஞ்சன் அறைக்குள் தாய் சென்று றஞ்சனை எழுப்புதல்.)

செல்லம் :- அப்பு! எழும்புங்கோ... வீட்டில வேலைகள் கிடக்கெல்லே.... அப்பாவுக்கும் ஏலாதாம் ஒழும்புங்கோ!!!

ரஞ்சன் :- (கைகளை மடித்து விரித்தபடி எழும்புதல்) ஆ... அம்மா! தேத்தண்ணி ஆத்துங்கோ நான் போய் கால் முகம் கழுவிட்டுவாறன்.

(ரஞ்சன் முன் வலதுபகுதியால் செல்ல தாய் தண்ணியை அடுப்பில் கொதிக்க வைக்கிறாள்)

(ரஞ்சன் துவாயால் துடைத்த படி உள்நுழைய சுவாமிநாதன் மெல்ல எழுந்து றேடியோவை நிப்பாட்டுகிறான்)

சுவாமிநாதன் :- அப்பு! சுற்றுலாவுக்கு போகாதது வருத்தமா இருக்கோ!

ரஞ்சன் :- அப்பா! அதைவிடுங்கோ. நீங்கள் பேசாம படுங்கோ!........ இதெல்லாம் பெரியவிசயம் இல்லை.

(ரஞ்சன் கவனத்துடன் செல்லுதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(செல்லம் தேத்தண்ணி கொடுக்க அருந்தி விட்டு வேலைகளை செய்யத் தொடங்குகிறான்.)

(சுவாமிநாதன் கதிரையில் சாய்ந்து நித்திரை செய்கிறார்)

(திரைமெல்ல மூடுகிறது. ஒளிகள் மெல்ல மெல்ல மங்கிஅணைகின்றன.

***

## காட்சி -02



பாத்திரம் :- சுவாமிநாதன் - செல்லம் - ரஞ்சன்

இடம் :- வீடு

காலம் :- சிலநாட்கள் கழித்து காலைவேளை

(திரைமெல்ல விலகுகின்றது. மேடையின் பின்னணியில் பூபாள ஓசைகேட்க சுவாமிநாதன் வலையுடன் நடுமேடைக்கு வருகிறான்.)

சுவாமிநாதன் :- செல்லம்... செல்லம்...

(செல்லம் குளியலறையிலிருந்து வருதல்)

செல்லம் :-என்னங்க! வெள்ளனவே வெளிக்கிட்டியள், வருத்தம் எண்டு சொன்னியள் மாறிட்டுதே

சுவாமிநாதன் :- ஓம்... ஓம்... நான் போகப் போறன் அந்த றேடியோவையும் களட்டித் தா

(செல்லம் கதிரைக்கருகிலுள்ள றேடியோவை எடுத்துக் கொடுத்தல்)

சுவாமிநாதன் :- சரிநான் போட்டுவாறன்.

(கைகாட்டியவாறு சுவாமிநாதன் செல்கிறான்)

செல்லம் :- ரஞ்சன்... ரஞ்சன்... எழும்பணை இண்டைக்கு பள்ளிக்கூடமெல்லோ!........

ரஞ்சன் :- அம்மா (மெல்லக் கட்டிலை விட்டு எழுதல் பின்னணியில் இசை ஒலித்துக்கொண்டிருக்கிறது) எனக்குபள்ளிக்கூடம் போகவே பிடிக்கேல்ல

செல்லம் :- (வியப்பாக) ஏனப்பு!

ரஞ்சன் :- என்னை எல்லோரும் கிண்டல் செய்யினம். ஒருதரும் மதிக்கினம் இல்லையம்மா

(செல்லம், ரஞ்சன் அருகில் வந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம் :- ஏன்! ஏதாவது கொழுவல் நடந்ததோ

ரஞ்சன் :- இல்லையம்மா என்னை மீனவப் பையன் என கேலி செய்து என்னை வேறுபடுத்தியும் பேசினம் அம்மா (கலங்குதல)

செல்லம் :- ஏனையா! இதெல்லாம் சகயமப்பு! வாழ்க்கையென்றால் இன்பம் துன்பம் இரண்டும் வருமப்பு!

ரஞ்சன் :- அதுமட்டுமில்லையம்மா... எனது வகுப்புசேரைத் தவிர ரீச்சர்மாரும் என்னைக் கவனிக்கிறதில்லை.

(மேடையின் பின்னணியில் சோக இசை ஒலிக்கிறது)

செல்லம் :- இஞ்சை பார் பிள்ளை, படிப்புதான் முதல் மற்றவேன்ர கதைய விட்டிட்டு நீபோய் படி (செல்லம் உள்ளே செல்ல ரஞ்சன் பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாதல்)

திரை மூடுகிறது

***

## காட்சி - 03

இடம் :- பாடசாலை


காலம் :- காலை

பாத்திரங்கள் :- ராமு... ரஞ்சன் - தினேஸ்

(திரைமெல்லவிலகுகிறது. அரங்கின் பின்னணியில் மணியோசை ஒலிக்கப்படுகிறது. அரங்கு பாடசாலை போன்று காட்சிப்பொருட்கள் வைக்கப்பட்டுள்ளது. அரங்கில் ஒளிகள் பிரகாசிக்கின்றது. ரஞ்சன் முன் வலது மேடையால் வருகிறான்.)

ராமு :- ரஞ்சன்! வாப்பா!

(ரஞ்சித் ராமுவிடம் செல்லல்)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ரஞ்சன் :- இல்லைசேர்! உங்களுக்கே தெரியும்தானே! என்ட பிரச்சனையை என்னை ஒருத்தரும்...

(ராமு இடைமறித்து)

ராமு :- மதிக்கிறேல்ல அதுதானே. கவலைப்படாதே அப்பு நீ ஒரு பெரியாளா வந்துகாட்டினா இவங்களுக்கெல்லாம் அதிசயமாப் போகும் நானும் சந்தோசப்படுவன். உன் குடும்பமும் சந்தோசமாக இருக்கும்.

(ரஞ்சன் சிந்தித்தவாறு மெதுவாக நடந்து செல்கிறான்)

(ரஞ்சன் வகுப்பறையை அடைகிறான். வகுப்பறையில் ஆசிரியர் நுழைதல்)

தினேஸ் :- நான் இண்டைக்கு உங்களுக்கு தாவரவியல் பற்றி படிப்பிக்கபோறன். எல்லாரும் புத்தகத்தை எடுங்கோ..

(சிந்தனையில் ஆழ்ந்தபடி இருந்த ரஞ்சனை உரத்த சத்தத்துடன் அழைக்கிறார்.)

ரஞ்சன் :- (திகைத்துஎழுந்து) சொல்லுங்கோசேர்!

தினேஸ் :- (கோபமாக) இண்டைக்கு என்ன படிச்சனாங்கள் சொல்லு... சொல்லு..

ரஞ்சன் :- (சலசலப்புடன் நிற்கிறான்)

தினேஸ் :- நீ எப்பவும் இப்படித்தான் கல்லுளிமங்கன் போல தான் இருப்பாய். சீ! வெளியால போ! (விரட்டுதல்)

(மாணவர்கள் சிரித்தல் மேடையின் பின்னணியில் முகாதி இசைக்கப்படுகிறது. ஒளிகள் மங்குகின்றன.)

ரஞ்சன் :- (அழுதபடி) வெளியேறுதல்.

(திரைவிலக முன் ரஞ்சனது கஸ்ரங்கள் வேதனைகள் பாடல் மூலம் இசைக்க ஒளி மங்குகிறது.)

திரைவிலகுதல்

பாடல் :- வேதனை துக்கத்தை சுமந்து"

பாவம் பழிகளை ஏற்று"

அவமானம் கேலிகளை தாங்கி" (2தடவை)

வந்தேன்...

(பின்னணியில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 04

பாத்திரங்கள் :- ரஞ்சன் - செல்லம்

இடம் :- வீடு

காலம் :- இரவு

(திரை மெல்ல விலகுகிறது ஒளிகள் பிரகாசமற்று மங்கி காணப்படுகின்றன. இரவை புலப்படுத்தும் ஒலி அரங்கப் பின்னணியில் கேட்க அரங்கில் சலசலப்பு சத்தங்கள் சூழ்கின்றன.)

செல்லம் :- ரஞ்சன்.. ரஞ்சன்..(சோகமாக)

ரஞ்சன் :- என்னம்மா!!! (திகைத்து)

செல்லம் :- மணி 7 ஆகப் போகுது அப்பாவை இன்னும் காணல! ராசா

ரஞ்சன் :- அம்மா நான் போய் பார்த்திட்டு வரட்டே!

செல்லம் :- (முன்மேடைக்குவந்து) ஓமப்பு எனக்கு பயமாக இருக்கு என்னாச்சோ? ஏதாச்சோ ஒண்டும் தெரியல (பதறுதல்)

ரஞ்சன் :- பயப்பிடாதையுங்கோ! நான் போய் பார்த்திட்டு வாறன்.

(ரஞ்சன் கடற்கரையை நோக்கி விரைகிறான் அரங்கின் கடற்கரை காட்சி வேகமாக மாற்றமடைய நீலநிற ஒளி பிரகாசிக்கிறது. பின்னணியின் அலைகளின் ஒசை எழுப்பப்படுகிறது.)

(குறிப்பிட்ட தூரத்தில் மக்கள் கூட்டமாக சுற்றி நிற்கின்றனர்.)

ரஞ்சன் :- (அந்த நெரிசலை விலக்கியவாறு எட்டிப் பார்க்கிறான்) உறைந்த படி கீழே விழுகிறான்.

(மேடையின் பின்னணியில் சோக ஓசை ஒலிக்கப்பட அரங்கின் ஒலியில் மாற்றம் ஏற்பட்டு மங்கலடைகிறது.)

இவனது கண்ணீரும்,சோகமும் ஏக்கத்தையும் நிலையையும் புலப்படுத்தியது.

ரஞ்சன் :- அப்பா! அப்பா! எங்களவிட்டிட்டு ஏனப்பா சென்றீர்கள் நாங்கள் இனி எப்படியப்பா வாழ்வது என அழுதல்.

(சுவாமிநாதன் இறந்ததை கேள்வியுற்ற செல்லமும் ஓடி வந்து அழுதல். அரங்கில் இருள் சூழ்கிறது. பாடல் ஒன்றும் இசைக்கப்படுகிறது.)

பாடல் :-துன்பம் துன்பம் வாழ்வில் எங்கும் துன்பம்

துன்பமே நிலையானது எம்வாழ்வில் (2 தடவை)

ரஞ்சன் :- (அழுதபடி தடித்த குரலில்) அம்மா எங்களுக்கு இனிவிடிவு என்று இல்லையா! நாம் இனி என்னம்மா செய்வது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ரஞ்சனின் கண்ணீரைதுடைத்தபடி)

செல்லம் :- அழாதமகன்! நீ படிச்சு பெரியாளாகிட்ரால் இந்தத் துன்பத்தை எல்லாம் போக்கலாம். பிறரிடம் மதிப்பும் பெறலாம். நான் உன்னை வடிவாக படிக்க வைச்சு பெரியாளாக்கிறன்.

(செல்லம் சோகத்துடன் ரஞ்சனின் தலையை வருடுதல்)

(சிலகாலங்கள் கழிகின்றன. புதுவிதமான இனிய ஓசை எழுப்பப்படுகிறது. ஒளிகள் பிரகாசமடைகின்றன.)

(ரஞ்சன் மகிழ்சியுடன் வருதல்.)

ரஞ்சன் :- அம்மா.. அம்மா...

செல்லம் :- (செல்லம்மா மேடைக்குள் நுழைதல்)

ரஞ்சன் :- (செல்லம்மாவை கட்டியணைத்தபடி) அம்மா நான் ஆசிரியர் ஆகிட்டனம்மா!

செல்லம் :- (ஆனந்தக் கண்ணீருடன்) நல்லதப்பா! நீ எடுத்த முயற்சிக்கு இது தானயா பலன்!.....

ரஞ்சன் :- அம்மா! நீங்கள் அண்டைக்கு என்னை திடமாகச் சொன்னீங்களே முயற்சி செய்து விழித்தெழுந்தால் பயன் கிட்டுமென்று. அதைப்போலவே சாதிச்சிட்டனம்மா!

(மேடையில் ஒலிகள் அதிகமாகிறது. பிரகாசம் அதிகரிக்கிறது)

ரஞ்சன் :- அம்மா! இதில் முக்கியமான விடயம் என்னெண்டா நான் படிச்ச பள்ளிக்கூடத்திலேயே நான் ஆசிரியராயிட்டன். (மகிழ்தல்)

செல்லம் :- (ரஞ்சனை கட்டி தழுவியபடி) சந்தோசமப்பு!

(இருவரும் ஆனந்தக் கண்ணீர் சொரிதல்)

(திரை மெல்ல மூடுகிறது. ஒளிகள் பிரகாசம் மங்குகிறது. அரங்கின் பின்னணியில் உற்சாகமாக பாடல் பாடப்படுகிறது)

பாடல் :- மனிதா மனிதா கவலைவிட்டு நீ விழித்தெழு!

மனிதா மனிதா கவலை விட்டு நீ விழித்தெழு!

முயற்சி செய்து நீ விழித்தெழு!

முயற்சி செய்து நீ விழித்தெழு! (2 தடவை)



திரை மூடுகிறது

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பின் பயன்பாடு

இன்றைய இருபதாம் நூற்றாண்டின் நவீன உலகின் விஞ்ஞான விந்தைகளின் விளிப்பான காலத்தில் நாம் வாழ்கின்றோம். இன்றைய இக்கால கட்டத்தில் உலகத்தையே உள்ளங்கைக்குள் கொண்டு வரும் ஒரு யுகத்தில் நிற்கின்றோம்.

இவ்வாறான உலகிலுள்ள அனைத்து உயிரினங்களிலும் மனிதனுக்கு மட்டுமே உள்ள பெருமை ஆறறிவுடன் இயங்குவதாகும். இதில் ஆறாம் அறிவான பகுத்தறிவுக்கு மிகவும் முக்கியத்துவம் உள்ளது. காரணம், அதுவே மனிதன் இவ்வளவு தூரம் பரிணாம வளர்ச்சியடைய வைத்துள்ளது. ஒரு விடயத்தையோ அல்லது சூழலையோ தருணத்துக்கேற்ற வகையில் தன் அறிவை பயன்படுத்தி பகுத்துப் பார்த்து அதற்கு ஏற்றாற் போல செயற்படுத்துவதில் மனிதனுக்குஉண்டானசிறப்பு இப் பகுத்தறிவுதான்.

தான் கேட்ட பார்த்த வாசித்த உணர்ந்த விசயங்களின் மூலம் பெற்றஅறிவைப் பயன்படுத்தி தன்னுடைய செயல்களுக்கான உத்திகளை கையாள முடிகின்றது.

இங்கே நாம் கேட்ட பார்த்த உணர்ந்த விடயங்களை கேட்டுக் கொண்டு இருக்க முடியாது. நாம் கேட்ட பார்த்த விடயங்களை விட நாம் வாசித்து தெரிந்து கொண்ட விடயமே அதிகம். ஆதிகமான நேரம் கேட்டுக் கொண்டோ பார்த்துக் கொண்டோ இருக்க முடிவதில்லை. அதற்கான காலம் போதாது. முழுமையான விசயத்தையும் ஒருவரால் சரியாக கூற முடியாது. அனைத்தையும் பார்க்கமுடியாது.

ஆனால் வாசிப்பு அப்படியல்ல. அதன் மூலம் அனைத்து விசயங்களையும் முழுமையாக உடனே அறிந்து புரிய முடியும். நம் வாழ்நாள் முழுவதும் வாசித்துஅறிவை பெருக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே போகலாம். ஏனெனில் வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான். வாசிப்பு ஒருஅறிவை வழங்கும் அமுதசுரபி. அதன் மூலம் அனைத்தையும் அறியமுடியும். வாசிப்பானது ஒருவரின் சிந்தனை திறனை அதிகரிக்கச் செய்யும்.



நம் மனிதப்பிறப்பின் வாசிப்பு முறையானது முன்பள்ளியிலிருந்தே தொடங்குகிறது. இன்று அதிகாலையில் விழித்தவுடனே காலை வணக்கத்தை வட்ஸ்அப்பிலோ, வைபரிலோ, முக நூலிலோ பார்த்து படிப்பதிலிருந்தே தொடங்குகிறது இன்றையவாசிப்பு.

நமக்கு, நூல்கள் என்பனமிகச் சிறந்த நண்பன். மனித நட்பு, நண்பன் என்பதுநேரத்திற்கு ஏற்றபடி தன் கருத்தை மாற்றிக் கொள்வார். ஆனால் ஒரு நூலில் அல்லது புத்தகத்தில் எக்காலத்திலும் அது தன்னுடைய கருத்தில் மாறுவதில்லை. வாசிக்க வாசிக்க நம்மை, அறிவுள்ள பண்புள்ள மனிதனாக மாற்றுகிறது. புத்தகவாசிப்பு மூலம் பெற்றஅறிவை வாழ்நாளில் தேவையான போது ஏற்றுக் கொள்ள முடியும்.

நாம் தற்போது பார்த்த பார்க்கின்ற விஞ்ஞானிகள், அறிஞர்கள், கல்வியாளர்கள் அனைவரும் வாசிப்பு பழக்கத்தை கொண்டவர்களே. வாசிப்பு என்பது எமது பாடப் புத்தகங்களுடன் நின்று விடாது அதைத்தாண்டி பொதுவான அறிவை வழங்கக்க கூடியவற்றை வாசிக்க வேண்டும். “கண்டதும் கற்றவன் பண்டிதனாவான்” என்பதற்கிணங்க பழக்கிக் கொள்வதில் நல்லது. எனவே இன்றுகாணும் அறிஞர்கள், விஞ்ஞானிகள், பெரியோர்கள் ஆகியோர் நூல்களை வாசித்து உச்சபயனைப் பெற்றனர் என்றால் மிகையாகாது.

இன்றைய சிறுபராயத்தினர் வாசிப்பை நேசிப்பதில்லை. பாடப்புத்தகங்களுடன் பரீட்சை எழுதி தேர்வு அடைந்தால் போதும் என்ற நிலையிலுள்ளனர். அவ்வாறில்லாமல் பாடசாலைகளிலும் வீடுகளிலும் நூலகம் அமைத்து பலவிதமான புத்தகங்களையும் வாசித்து பழக கற்ற வேண்டும்.

முடிவாக வாசிப்பு மட்டுமே சுயமாக சிந்தித்து முடிவெடுக்கின்ற ஒரு செயற்பாடாகும்.

**திருமதி. குமுதினி கிருஷ்ணமூர்த்தி**
கிளற/பூநகரிநல்லூர் ம. வி
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசத்தை அழிக்கும் போதைப்பொருள்

போதையின் பாதை இன்று
புதைகுழி போன்றது
புரிந்து கொள்ள யாரும் இன்றி
புன்னகையும் அழுகின்றது.

கஞ்சா, மாவா, அவின் என
அத்தனையும் முழுவேகம்
அழகான நம் இனத்தவர் உயிரை
அழித்து விடப் போகின்றன

கண்படும் எம் இனத்தவர் இடமெல்லாம்
போதையின் விளைச்சல்கள்
பொலிவாய் வளர்ந்திங்கு
போதனைகள் செய்கின்றன
காக்க வந்த கடவுளனூதமிழினம்
இதன் காலைச் சுற்றிக் கிடக்கின்றது
புலியீர்ப்பு விசை கூட
இதன் பின்னால் போகிறது.

தமிழர் மண் எங்கும்
போதையின் விதைகள்
நம் இனத்தைஅழிப்பதற்கு
எதிரியின் வேசம்

குடும்பங்கள் குலைகின்றன
நடுவழியில் திரிகின்றன
போதையின் மயக்கத்தில்
போகிற இடம் தெரியாமல்

தமிழ் இளையர்கள் நிலைதவறி
விழுகின்றனர் - போதையில்
கஞ்சாப் புகை தனிவேறூதினம்
காவியம் படிக்கின்றனர்

அறிவியல் அறிந்தான்
தொழிநுட்பம் அறிந்தான்
அத்தனையும் அறிந்தென்ன
வாழத்தான் முடிகிறதாறூநின்மதியாய்

சுயநினைவை இழந்து - தினமும்
சுற்றங்களையும் தான் மறந்து
தள்ளாடும் தமிழினம்
தலைநிமிர்வது எப்போது□□

**ஆக்கம்**
**மனோகரன் சீராளன்**
13 கணிதப்பிரிவு
கிளி/பூநகரிமத்தியகல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பீனிச நோய்க்கு சித்த மருத்துவம்

நமது உடம்பின் உள்ளேயும் வெளியேயும் ஏற்படும் வியாதிகள் **4448.** பதினெண் சித்தர்கள் நோய் வருவதன் காரணங்களையும், அவற்றை குணமாக்கும் சித்தமருத்துவ மருந்துகளையும், அவற்றின் முறைகளையும் அழியாத செல்வங்களாக நமக்கு தந்துள்ளார்கள். அவற்றுள் பீனிசநோயை நிவர்த்தி செய்யும் சித்தமருத்துவ முறைகள் சிலவற்றை பார்ப்போம்.

பீனிசநோயின் வகைகளைப் பார்ப்போமானால் வாதபீனிசம், பித்தபீனிசம், நீர் பீனிசம் இரத்தப் பீனிசம், சீழ் பீனியம், மூலப் பீனிசம், கண்டப் பீனிசம்,சிலேத்மபீனிசம் ஆக எட்டு வகையாக காணப்படுகிறது. பொதுக் குணங்கள் என்றுபார்போமானால் மூலாதாரத்தில் கனலேறி கபாலத்தில் நீரை ஏற்றி நாசி அடைத்து மறு நாசியில் நீர் வடியும். புரு புரு என உணர்வு தோன்றும். நாசி என்றால் மூக்கு என்பது பொருள். அடிக்கடிதும்மல் விழும், பிடரியும் தலையும் கனத்து வீங்கும். வாய் வரண்டு நீர் திரண்டுவிழும். இது ஒரு வித நாற்றம் உண்டாகும். தேகத்தில் வெதுவெதுப்பு காணும். நாவில் ருசியும் நாசியில் மணமும் கெடும். சிரசுநீர் நெஞ்சில் இறங்கி கபம் கட்டும்.

வாதபீனிசநோயின் குணமானது நாசி வரண்டு நீர் வடியும். நீரானது பழுத்த சளி போல் திரண்டு நாற்றமில்லாமல் விழும்.

பித்த பீனிச நோயின் குணம் என்னவென்றால் நாசி வழியில் மஞ்சள் நிறமாய் சளிவடியும். புலால் நாறும்.

சிலேத்ம பீனிசத்தில் மூக்கானது மாறி மாறிஅடைத்து முத்துப்போல் நீர்வடிந்து நாற்றமுண்டாகும். துணுக்குப் போல சளிவிழுந்து நாசியில் ஊசிபோல குத்தும். கண்களில் நீர்கட்டும்.

நீர் பீனிசத்தில் விசப் பித்தமும் வெட்டையும் அதிகரித்துச் சிரசிலேறி மூக்கின் வழியாகநீர் வடிந்துகொண்டிருக்கும். பனிவாடை வீசும். மழைக்காலங்களில் நனைந்தால் நீர் மிகுந்து பிடரியும் முகமும் பரபரத்து ஊரும். நாசி அரிக்கும். அடிக்கடி தும்மல் உண்டாகும். தலைகனத்து வலி உண்டாகும். இரத்த பீனிசத்தில் வெட்டையின் பேரில் பித்தம் அதிகரித்து கபாலத்தில் ஏறிஅவற்றில் வட்டமாய் புண்ணாகி சீழ் வடியும். தலைவலியும் உண்டாகும்.

சீழ் பீனிசம், நாசிவழியில் சீழ் போலும் ஈருள்ளி கூடு போலும், சீழ் திரண்டு துர் நாற்றம் ஏற்பட்டு சீழில் மணந்தெரியாமல் விடாமல் தலைவலிக்கும். ஆனால் இந்த நோய்க்கு சீழ் பீனிச நோய் என்பது பெயர்.

இது வரையிலும் நாம் பார்த்த பீனிச நோய்கள் சிலவற்றுக்கு சித்தமருத்துவமுறையும், மருந்துகளையும் பார்ப்போம். சித்தமருத்துவமுறையில் இந்த பீனிச நோய்க்கு தைலமுறையும், நாசிவழியில் புகை உறுஞ்சும் மருத்துவமுறைகளும் சிறந்த முறைகளாகும். சாதிலிங்கம், பரஸ்கிப் பட்டை, மிளகு, கருஞ்சீரகம், துளசி இலைகளை ஓர் நிறையாய் பொடித்த காகிதத்தினுள் வைத்து சுருட்டி தீயில் கொழுத்தி நாசியில் புகையைநுகர்ந்து வந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா விதமான பீனிசநோய்களும் சுகமாகும்.

கரு எள் எண்ணெய் ஒருலீற்றர், வெற்றிலை, உசிலம் பட்டை இவைகளின் சாறு வகைக்கு அரைலீற்றர் ஒன்றாய் கலக்க வேண்டும். மிளகு, வால் மிளகு, சீரகம், சண்பகப்பூ வகைக்கு 10 கிராம் இவைகளை பொடித்து போட்டு கலந்து காய்ச்ச வேண்டும். பிறகு வடித்து தேவையான அளவு எடுத்து தலைக்குத் தேய்த்து தினமும் இவ்வாறு 10 நாட்கள் செய்து ஸ்நானம் செய்துவந்தால் பீனிசம் நீங்கும். குப்பைமேனி, ஆடு தீண்டாப்பாலை, அழிஞ்சிவேர் இவைகளை ஒன்றாய் கலந்து மெழுகு பதமாய் காய்ச்சி வடித்து தலைமுழுகி வந்தாலும் பீனிசநோய்கள் நிவர்தியாகும்.

ஆய்பட்டை, சந்தணம் வகைக்கு 10 கிராம், மட்டிப்பால் சாம்பிராணி வகைக்கு 10 கிராம் மிருதார்அஸ்கி ஜாதிலிங்கம் அரிதாரம் வகைக்கு 20 கிராம் இலுப்பை பிண்ணாக்கு 100 கிராம் இவைகளை ஊமத்தை இலைச் சாற்றால் நன்றாக அரைத்து எருக்கம் பாலும், சதுரக் கள்ளிப் பாலும் ஒரு வெண்மையான துணியில் நனைத்து எடுத்து உலர்ந்த பின் மேற்படிமருந்தை காய்ச்சி எடுத்துக் கொண்டு சிறிதளவுக்கு தரித்து சுங்கானில் வைத்து புகையை நாசியில் ஏற்றினால் மூலப் பீனிசம், கண்டப் பீனிசம் சீழ் பீனிசம் தீரும்.

**நீர்ப் பீனிசத்திற்கு தைலம்.**

நொச்சியிலைச் சாறு, நல்லெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகைக்கு¼ l வாய் வாய்வடங்கல், திரிகடுகு, கருஞ்சீரகம், அரைத்த கஸ்தூரி மஞ்சள், திப்பிலி மூலம், நொச்சிப்பட்டை 20 கிராம் வீதம் அரைத்து போட்டு காய்ச்சி வடித்து வாரம் இரு முறை தலைமுழுகி வந்தால் நீர்ப் பீனிசம் குணமாகும்.

நொச்சியிலை, கரிசாலை, வெற்றிலை, பச்சைமஞ்சள் இலைகளின் சாறுஒவ்வொருவகையிலும் ¼ l சுருள்ளிசாறு, நல்லெண்ணெய் வகைக்கு½ l மிளகு 10 கிராம் இவற்றைசுத்தம் செய்துநன்றாக இடித்து போட்டு பதமாய் காய்ச்சிவடித்து பத்திரப்படுத்த வேண்டும். இவற்றில் தேவையான அளவு எடுத்து அதிகாலையில் தலைமுழுகி வந்தால் தலைவலி, மூக்கடைப்பு, நீர் வடிதல், தும்மல் போன்ற பீனிசநோய்கள் குணமாகும்.

திரிகடுகு, மஞ்சள் ஒவ்வொன்றிலும் 10 கிராம் வீதம் எடுக்க வேண்டும் இவற்றை நன்றாக பழுத்த கண்டங்கத்தரி பழச் சாற்றில் ஆட்டி எடுக்க வேண்டும். இவற்றை சுத்தமான வெள்ளைத் துணியை நன்றாக தடவி திரிபோல் திரித்து நன்றாக உலர்ந்த பின் சிறிதுநேரம் கழித்துதேவையானஅளவுச் கத்தரித்து வைக்கவேண்டும். அவற்றில் ஒருதுண்டு எடுத்து நுனியில் தீப் பற்றவைத்து நாசியில் புகையை உறுஞ்சவேண்டும். இவ்வாறுஉறுஞ்சினால் சீறாய் பீனிசம் நீங்கும்.

"நோய் நாடி நோய் முதல் நாடிஅதுதணிக்கும்

வாய் நாடி வாய்ப்பச் செயல்"


அதாவது நோயாளியின் நோயை அறிந்து அது வந்த காரணத்தை அறிந்து, அதைப் போக்கும் முறையை அறிந்து அவன் உடலுக்கு ஏற்றவகையில் மருந்துவம் செய்யவேண்டும் என்பது வள்ளுவரின் குறள். அந்தவகையில் பீனிசநோயை வராமல் பாதுகாப்போம் எனக்கூறி சித்தமருத்துவத்தின் மூலம் எவ்வாறு பீனிச நோய் வராமல் பாதுகாப்பது என்பதையும் அறிந்து நடப்போமாக.

**DR. K.பிறேமராகவன்**
**சமூகநல மருத்துவ உத்தியோகத்தர், பூநகரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது மந்திரிகள்



1. மூளை – பிரதம மந்திரி
2. தண்டுவடம் - இணை அமைச்சர்
3. நரம்புமண்டலம் - ஊடகத்துறை அமைச்சர்
4. தலை - கல்வியமைச்சர்
5. தோல் - மனிதவள மேம்பாட்டு அமைச்சர்
6. எலும்பு - பாதுகாப்பு அமைச்சர்
7. கண் - வெளியுறவுத்துறை அமைச்சர்
8. காது - தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர்
9. மூக்கு – சுகாதாரதுறை அமைச்சர்
10. பல் - கிராமியத்துறை அமைச்சர்
11. இதயம் - உள்நாட்டு விவகாரதுறைஅமைச்சர்
12. கை - தொழிற்துறை அமைச்சர்
13. வயிறு - உளவுத்துறை அமைச்சர்
14. கால் - போக்குவரத்து அமைச்சர்

**லி. கேனுசா**

*தரம் - 6*

# வினாவிடை

1. மின்சாரபல்புகளில் நிரப்பப்படும் வாயு எது? ஆர்கன்
2. குளிர்சாதனங்களில் சேகரிக்கப்படும் வாயு எது? அமோனியம்
3. முனித உடலில் சுரக்கும் அமிலம் எது? ஹைட்ரோ குளோரிக் அமிலம்
4. சவர்க்காரங்களில் உள்ள அமிலம் எது? கொழுப்பு அமிலம்
5. எலுமிச்சம் பழத்தில் உள்ள அமிலம் எது? சிட்ரிக் அமிலம்
6. பித்த நீரைஉருவாக்கும் சுரப்பி எது? கல்லீரல்
7. கொக்கிப் புழுவால் ஏற்படும் தீங்குஎது? வயிற்றுப் போக்கு
8. மனித உடலில் உள்ள விலாஎலும்புகளின் எண்ணிக்கை? 33
9. மனித மண்டை ஓட்டிலுள்ள எலும்புகள் எத்தனை? 8

**லி.கவிசாந், தரம் - 02**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்

மனிதன் கல்வி சமூகத்தில் நாம் கல்வி கற்க ஆரம்பித்த பாழைய காலம் தொட்டே வாசிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறோம். சிந்திக்கத் தெரிந்தமனிதன் ஒரு தவிர்க்க இயலாத அங்கமாக வாசிப்பு இருந்து வருகிறது.

ஆனால் தற்போதுள்ள சூழலில் இளைய தலைமுறையினரிடையே பொதுவாக பார்க்கும் போது வாசிப்பு மிகவும் குறைந்து விட்டது. புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் இருந்தால் சக மனிதர்களை நேசிக்கும் பழக்கம் வரும் என்பார்கள்.

சிந்தனையின் தூண்டுகோல் புத்தகம். வாசிக்கும் பழக்கம் அருகிவரும் காலம் இது. இப்பழக்கம் உடைய சிலருக்கு துணையாக இருப்பது நூலகங்கள். பரந்துபட்ட அறிவைப் பெற பல்துறை புத்தகங்களையும் வாசிப்பது அவசியம் என்பது கற்றறிந்த பெரியவர்களின் கருத்து.

வாசிக்கும் பழக்கத்தை குழந்தைப் பருவத்திலேயே வளர்த்தெடுப்பது பெற்றோரின் கடமை என்கிறார்கள் படைப்பாளர்கள். பாடப்புத்தகங்கள் மட்டுமே பயன்தராது பரந்து விரிந்த உலகில் பலவிதமான நூல்களையும் வாசிக்க மாணவர்கள் பழகவேண்டும். நேரம் கிடைக்கும் போது வாசிக்கிறேன் என்பதை விட நேரம் ஒதுக்கி வாசிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளவேண்டும் என்பதே வாசிப்பை நேசிப்பவர்களின் கருத்து.

வாசிப்பு பல முக்கியமான திறன்களைக் கொண்ட ஒரு செயன்முறை ஆகும். அதாவது சிந்தித்தல், ஆராய்தல் காரணம் கண்டறிதல் கற்பனை செய்தல் என்பவற்றுடன் கண்டறிதல் போன்றவற்றை உள்ளடக்கும். வாசிப்பின் நோக்கமாக பொழுது போக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒய்வுக்காக வாசித்தல், தகவல் தேவைக்காக வாசித்தல், அறிவைத்தேடி வாசித்தல், மகிழ்ச்சிகரமானதும் சுவாரசியமானதுமான ஒரு செயற்பாடாக காணப்படுகின்றன.

எதிர்கால வெற்றிக்குரிய ஒரு திறவுகோல் என்றும் பிள்ளைகளை விளங்க வைப்பது ஆசிரியர்களுக்கடுத்து பெற்றோர்களின் கடமையாகும். அப்போது தான் எதிர் காலத்தில் பாவிக்கப்போகும் இலத்திரணியல் ஊடகங்களின் தகவல்கள், இணையச் செய்திகள், கட்டுரைகள் போன்றவற்றையும் வாசிப்பதற்கும் பாவிப்பதற்கும் பழகிக்கொள்வார்கள்.

தகவல் பெறுவதற்கு மிகமுக்கியமான ஒரு வழி வாசிப்புஆகும். வாசிப்பு ஒரு மனிதனை விடயம் தெரிந்த அறிந்த அறிவு பெற்ற மனிதனாக உருவாக்கும். ஒரு மனிதன் தாம் வேலைசெய்யும் இடத்தில் வினைத்திறனுடன் வேலை செய்வதற்கும் வாசிப்புஅவசியம்.

தன்னைப்பற்றிய ஒரு நல்ல மதிப்பை அல்லது கௌரவத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைவது வாசிப்புதான். குறைவாக வாசிப்பவர்கள் அவர்களுடைய திறமைகளிலும் நம்பிக்கை இழந்தவர்களாக அல்லது குறைந்தவர்களாகவே இருப்பர். ஒரு பிள்ளையின் வாசிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஒரு பிள்ளை வாசிப்பது குறைவாக இருந்தால் அதற்கான காரணத்தை கண்டறிய வேண்டியதும் அவசியம்.

வாசிப்பு என்பது ஒரு தனிநபரின் வெற்றிக்கு இன்றியமையாதததது. முதலில் வாசிப்பின் முக்கியத்துவம். பிள்ளைகள் எப்பொழுதும் பாடப்புத்தகத்தை மட்டும் வாசிப்பதற்கு விருப்பமானவர்கள். சிறுவர்களுக்கான கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள், கவிதைகள், வரலாறுகள், சமயம், பொதுஅறிவுப்புத்தகங்கள் போன்ற விடயங்களை வாசித்து மகிழ்வதற்கு சந்தர்ப்பங்கள் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும்.

**பா.விதுசா**

கிளி/பூநகரி மத்திய கல்லூரி

2021 வர்த்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பு

வாசிப்பதால் மனிதனுக்கு பூரணமான வாழ்வு கிடைக்கிறது. வாசிப்பு இருந்தாலே சாதிக்கும் எண்ணம் மேலோங்கும். ஆனால் இன்றைய மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது. கைத்தொலைபேசியில் அதிகநேரத்தையும் வீணடிக்கின்றனர். வீட்டிற்கு வீடு வாசற்படிபோன்று போனில்லாத மனிதர்களில்லை. இணையத்தில் நுழையாத மாணவர்களும் இல்லை எனலாம். வலைத்தளங்கலெல்லாம் கொலைத்தளங்களாய் மாறிவருகின்றன. இதனால் மாணவர்களது எதிர்காலம் கேள்விக்குறியில் நிற்கிறது. கற்கவேண்டியநேரத்தில் கற்காமல் வீதியிலே பயணஞ் செய்கின்றனர் விபத்துக்களை உருவாக்கின்றனர், சந்தியில் சண்டைகளும் வாள் வெட்டுக்களும் நித்தமும் தொடருது. சமூதாயத்தை சீரளிய வைப்பதால் எத்தனையோ குழப்பங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். மாணவர்கள் தமது பொழுது போக்காக கைத்தொலைபேசியையே நாடுகின்றனர். அருகில் நூலகம் இருந்தும் நல்லநண்பன் எனக் கருதப்படும் நூல்களை வாசிக்கத் தவறுகின்றனர்.

"நூல் பலகல" என்றார் ஔவையார். எவ்வளவு நூல்களை நாம் வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு நமது அறிவும் பெருகும், ஆர்வமும் அதிகரிக்கும், சிந்தனையும் மேலோங்கும். கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பது நம் ஆன்றோர் வாக்கு. புத்தகங்களை போன்ற சிறந்த கருவூலம் வேறெங்கும் இல்லை. வாசிப்பே மனிதனைப் பூரணப்படுத்துகின்றது. வாசிக்கும் பழக்கம் இல்லாதவனிடத்தே வாழ்க்கை என்றும் இருள் மயமாகவே காட்சி தரும். தோண்டத் தோண்ட நீரூற்று கிடைப்பது போல் படிக்கப்படிக்க கல்வியறிவும் மெருகேறும். எழுத எழுதத்தான் கையெழுத்தும் அழகாகும். நூல்களை வாசிக்க வாசிக்கப் பற்பல அனுபவங்களைப் பெற்றிட முடியும். சுவரிருந்தால் தான் சித்திரம் வரையமுடியும். அதேபோல், மனமிருந்தால் தான் வாசிப்பில் ஆசை வரும். வெட்ட வெட்டத் தழைக்கும் வாழையைப் போல் வாசிக்கப் பழகினாலே வாழ்க்கையும் செழிப்பாகும். வாசிப்பதனால் புதியதகவல்களைஅறிந்திடமுடியும், கிரகித்துக் கொள்ளவும், திறன்களை வளர்த்துக் கொள்ளவும் முடிகிறது. வாழ்வு வளம் பெறஅறிவுதேவை. அறிவை வளர்ப்பதற்கு நல்ல நூல்கள் தேவை. வாசித்தலே உலகில் சிறந்ததொரு பொழுதுபோக்காகும்.

"கண்ணுடைய தென்பர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையார் கல்லாதவர்" - என்கின்றார் வள்ளுவர். ஊனக் கண்ணினும் ஞானக் கண்ணே- அறிவுக் கண்ணே சிறந்தது என்பதை இக்குறள் நன்கு புலப்படுத்துகின்றது. கல்விப் பெருஞ்செல்வத்தை வழங்குவன நூல்களேஆகும். அவற்றை வாசிப்பது நம் கடமையாகும்.

நூல்கள் வாசிக்கும் பழக்கம் உடையவர்கள் தனிமையைஉணர்வை ஒரு போதும் பெறுவதில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நூல்களைஅவர்கள் நாடிச் சென்று விட முடியும். வாழ்வில் கவலைகள் நேரும் போதெல்லாம் விரும்பிய நூல்களை படிப்பதன் மூலம் அவற்றை போக்கிக் கொள்ளலாம். என்னை எந்தச் சந்தர்ப்பங்களிலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே எனக் கூறினான் ஆங்கிலக் கவிஞன் ஒருவன். புத்தகங்களைப் போன்ற நண்பர்கள் கிடைப்பதுஅரிது. சந்தர்ப்பம் பார்த்துநண்பர்கள் எம்மைக் கைவிட்டுவிடலாம். ஆனால் புத்தகங்கள் என்றுமே நம்மோடு கலந்து உரையாடக் காத்திருப்பவை. ஆவை நம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பதோ கோவித்துக்கொள்வதோ இல்லை. நமக்கு இன்பந் தர எப்போதும் தயார் நிலையில் காத்திருக்கின்றன. நமக்கு அறிவூட்டும் ஆசானாய் புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றை நாம் நன்கு பயன்படுத்தினால் நன்மையும் எமக்கே. ஒவ்வொருவரும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது என்றார் அறிஞர் பேக்கன். அவரது கூற்றுக்கமையநாம் ஓய்வு நேரத்தை புத்தகங்கள் வாசிப்பதில் செலவிடவேண்டும். நாம் இளமை முதல் நூல்களைவாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாளடைவில் அறிவும் பண்பும் ஆற்றலும் மிக்கோராக வாழ்வதற்கு அதுவழிகாட்டியாக அமையும். வையகத்து வாழ்வாங்கு வாழும் நெறியினைஅறிந்திடலாம். அன்னப் பறவையானது நீரைவிலகிப் பாலை மட்டும் பருகுதல் போன்று மாணவர்கள் தேவையற்ற நூல்களை விலக்கிவிட்டு தேவையான பொருத்தமான, பயன்தரும் நூல்களை மட்டுமே வாசித்தல் வேண்டும்.

"தொண்டனைத் தூறும் மணற் கேணிமாந்தர்க்குக்

கற்றானைத் தூறும் அறிவு" - என்றார் வள்ளுவர்.

நூல்களை வாசிக்க வாசிக்கப் பற்பல அனுபவங்களை பெற்றிட முடியும். வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கக் கூடியவழியை நூல்களே தருகின்றன. நூல்களை வாசிப்பதாலே மனிதத்தன்மையுடையோராக மான்புடன் வாழ முடியும். மாணவ மாணவியர் தம் இள வயதில் கூடிய பகுதிகளை பாடசாலையில் கழிக்க நேரிடுவதால் பாடசாலைகளில் அவர்களுக்கு வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டியது ஆசிரியர்களின் முக்கிய கடமையாக உள்ளது. இன்று எத்தனையோ தகவல் தொடர்பு ஊடகங்கள் வந்து விட்டாலும், இன்னமும் அறிவை வளர்ப்பதில் பத்திரிகைகள்,சஞ்சிகைகள், நூல்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. பட்டம் பெற்று தொடர்ந்து அதைப் பயன்படுத்தா விட்டால் இருந்த அறிவும் மங்கிவிடும். தொடர்ந்து வாசிக்கும் சாதாரன கல்விகற்றவரின் அறிவு பல துறைகளில் சிறந்துவிளங்கும். உலகின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான குறைந்த பாடசாலை கல்விகற்றவரான அமெரிக்க எழுத்தாளர் மார்க்டுவென், இவர் உயர் நிலையை அடையக் காரணம் அவர்கள் வாசிப்பில் காட்டிய கூடியஆர்வமேஆகும்.

வாசிப்பதால் எமதுஅறிவு வளர்வதோடு மட்டுமின்றி, விசாலமும் அடைகின்றது. வெவ்வேறு துறைகள் பற்றியஅறிவைநாம் எப்படிப் பெறலாமென்ற விபரமும் எமக்குக் கிடைத்திடும். சிக்கலான ஆழமான விடயங்களையும் பத்திரிகைகள் இலகுவான மொழிநடையில் வெளியிடுவதால் பாமரமக்களும் வாசிக்கக் கூடியதாக இருக்கும். சஞ்சிகை,பத்திரிகைகளில் புதிதாகக் கண்டுபிடிக்கும் அறிவியல் விடயங்கள், உலகில் நடக்கும் அரசியல், சமூகமாற்றங்கள் விளையாட்டுச் செய்திகள், கவிதைப்போட்டிகள், கட்டுரை, ஓவியம், சிறுகதை போன்ற செய்திகளை உடனுக்குடன் அறியக்கூடியதாக இருக்கும்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே தெளிந்திடும் அறிவுத்திறனை வளர்த்திடனும். பெற்றோர்களும், பாடசாலை ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு வாசிப்புதிறனை ஊக்குவித்து தெளிந்த நீரோடையாய் வாசிப்பதை தெளிவுபடுத்தனும். தேடல் இல்லாத வாழ்வும் இல்லை வாசிப்பு இல்லாமல் தெளிவும் இல்லை. இருளைக் கிழிக்கின்ற ஒளிக் கீற்றாய், இன்னல் போக்கும் மதி ஊற்றாய் மனிதரிடத்தே வாசிப்பை பதிந்திடவேண்டும். வாசிப்பே என்றும் எம் நீரூற்று.

முற்றும்.

**தயாமினி குபேரமூர்த்தி**
அளவோடைவீதி,
இணுவில் மேற்கு, இணுவில், சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழுமியங்களில் தலைமைத்துவம்

பண்பாடு என்ற பெரு விருட்சத்தின் ஆணிவேராக அமைவது விழுமியங்கள் ஆகும். ஒரு பண்பாட்டைச் சார்ந்தோரின் வாழ்வியலுக்கும், செயல்களுக்கும், நடத்தைமுறைகளுக்கும் எவை? எவை? மிகவும் அவசியமானது என்று கருதப்படுகின்றதோ அவை அப்பண்பாட்டினரின் விழுமியங்கள் ஆகும்.

விழுமியம் என்ற சொல்லின் பொருளானது சிறந்த, உயர்வான, மேன்மையான, அரிய என்ற பொருளில் தமிழகராதிகளில் குறிப்பிடப்படுகின்றது. அதாவது உயர்வான மனித வாழ்வியலுக்கு தேவைப்படுகின்ற உயரிய நடத்தை முறைகளே விழுமியம் ஆகும். விழுமியங்கள் மனிதனை மனிதனாக வாழ வைக்க உதவுகின்றன. மனிதன் தன்னை உலகில் அடையாளப்படுத்திக் கொள்வதற்கும் விழுமியங்களே முக்கிய குறிகாட்டியாக உள்ளது.

மனிதனை மனிதனாக வாழ வைக்கப் பயன்படுகின்ற விழுமியப்பண்புகளுள் அன்பு, பொறுமை, தலைமைத்துவம், சகோதரத்துவம், பொறுமை, பிறபொருள் நாடாமை, விட்டுக்கொடுத்தல், சமாதானம், விடாமுயற்சி, மற்றும் சாந்தி, என்பவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம். விழுமியப் பண்புகளில் உயர்ந்த பண்பு அன்பு ஆகும். அடுத்து சீரற்று அல்லது ஒழுங்கற்று காணப்படும் ஒரு சமூகத்தை அல்லது ஒரு மனிதனை ஒழுங்கு நிலைப்படுத்த உதவும் ஓர் பாரிய விழுமியப்பண்பே தலைமைத்துவம் ஆகும்.

தலைமைத்துவம் என்ற சொல்லின் பொருளானது ஒருவரின் அல்லது ஒரு குழுவினரின் அல்லது ஒரு சமூகத்தின் பொது நோக்கங்களை அடைவதற்காகஅங்கு காணப்படுகின்ற வளங்களைப் பயனுறுதியான வகையில் பயன்படுத்திச் செயற்பாடுகளை பங்கேற்பு முறையில் திட்டமிட்டு பொறுப்புக்களை பகிர்ந்து தலைமைவகித்து வழிநடாத்திச் செல்லும் ஆற்றல் ஆகும். சிறந்த தலைமைத்துவமான வற்புறுத்தல் அல்லாத வலுக்கட்டாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாத இலகுவான வழிகள் ஊடாகச் சரியான வழியில் ஒரு குழுவினை ஒன்றாக இணைத்து வைத்திருந்து, அக்குழுவானது ஒரு நோக்கத்தை அடையும் பொருட்டு நெறிப்படுத்திச் செல்லும் தகைமையேஆகும்.

அதாவது ஒரு நிறுவனத்தின் தலைவரை எடுத்துக் கொண்டால் ஒருநோக்கத்தை அடையும் பொருட்டுத் தன்னைப் பின்பற்றுபவர்களின் நடத்தை மீது தாக்கம் செலுத்தத் தக்கதான ஓர் ஆற்றலைக் கொண்டிருப்பார். அத்தகையஆற்றலையும் நாம் தலைமைத்துவம் எனலாம். மேலும் தன்னைப் பின்பற்றுபவர்கள் நம்பிக்கையுடன் குறித்த செயலொன்றை செயலாற்றுவதற்கு தூண்டக் கூடிய ஒரு வகையில் தலைவருக்கு இருக்கும் ஆற்றலையும் நாம் தலைமைத்துவம் எனக் கருதலாம்.

குறிப்பிட்ட ஒவ்வொரு சூழ்நிலையிலும் செயலாற்றப்பட வேண்டிய விடயங்களை நிர்ணயம் செய்து அவற்றை ஒழுங்குபடுத்தி வெற்றிகரமாக நிறைவேற்றத் தேவையான திட்டங்களை வகுத்து அத்திட்டங்களை அமுல்படுத்தி தம்மோடு பலரையும் ஆர்வத்தோடு இணையச் செய்து குறித்த செயற்பாட்டின் போது ஏற்படக் கூடிய முரண்பாடுகள், சிக்கல்களுக்குத் தீர்வுகளை பெறும் ஒருவர் இருக்க வேண்டியதுஅவசியமாகும்.

தலைமைத்துவத்தின் சிறப்பானது தனதும் தன்னைப் பின்பற்று வோரதும் விழுமியங்களையும் ஊக்கல்களையும் நோக்குகின்றது என்ற பார்வையில் தங்கியுள்ளது எனலாம். தலைமைத்துவம் என்பது சவால்கள் நிறைந்த ஒரு விளையாட்டு. எனவே வெற்றி,தோல்விகள் அனைத்தும் தலைவரில் தங்கியுள்ளது. வெற்றியைப் பகிர்வதும் தோல்வியை சீர் செய்வதும், எதிராளியின் வியூகங்களை அறிவதும் சிறந்த தலைமையிலிருக்க வேண்டியது அவசியம்.

பின்வரும் ரீதியில் தலைமைத்துவ வகைகளை பிரிக்கலாம் என உளவியலாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் நிறைவேற்றுத் தலைவர், நிர்வாகத்தலைவர், வகுப்புத் தலைவர், துறைசார் நிபுணத் தலைவர் அதாவது துறைசார் நிபுணத்துவம் என்றவகையில் மனிதன் தான் செய்யும் துறையில் (வைத்தியம், பொறியியல், கணக்கீட்டு) நிபுணத்துவம் பெற்றிருத்தல் என்பதைக் குறிக்கும்.

அடுத்து நாம் சிறந்த தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் எவையென ஆராய்வோமானால், அவற்றில் தலைவனானவன் நேர ஒழுங்கை கடைப்பிடிப்பவனாகவும் நம்பிக்கையுடன் செயலாற்றும் தன்மையுடையவனாகவும், தன் குழுவினர்களை சரியான முறையில் வழிநடத்திச் செல்லும் இயல்புடையவனாகவும் தன்னுடைய பொறுப்பு உணர்ந்து செயலாற்றும் ஆற்றலுடையவனாகவும் சமூகத்தை ஒற்றுமையாக ஆக்கக் கூடியவனாகவும் தன்னுடைய கருத்துக்களை சரியான முறையில் சமூகத்தில் எடுத்துரைப்பவனாகவும் கிருஸ்ணபகவான் பகவத் கீதையில் “கடமையைசெய் பலனை எதிர் பாராதே” எனக் கூறியது போல் கடமையை மட்டும் சரிவர செய்பவனாகவும் பராபட்சம் பார்க்காத இயல்புடையவனாகவும் தகுந்த கட்டுப்பாட்டுடன் தன்னுடைய குழுவை வழிநடாத்தக் கூடிய இயல்பு படைத்தவனாகவும் இருக்க வேண்டும்.

அதே போன்று ஒரு தலைவனிடம் தலைமைத்துவ பண்புகள் உடன் தன்னம்பிக்கை, நேர் மனப்பாங்கு, உணர்சிகளை (கோபம், கவலை, மகிழ்ச்சி) கட்டுப்படுத்தும் திறன் ஒருவரைப்பற்றி மதிப்பீடு செய்யக் கூடிய ஆற்றல், பகுப்பாயும் திறன்,பிறரை ஊக்கப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன், விமர்சனங்களை ஏற்கும் பண்பு போன்ற பண்புகளும் தலைமைத்துவத்தின் ஊடாக விருத்தியடைந்து செல்லும்.

அத்துடன் தலைவரானவர் திட்மிடல்,கொள்கையுருவாக்கம், திட்டங்களையும் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தல், உள்ளகத் தொடர்புகளை கட்டுப்படுத்தல், முரண்பாடுகளை பிரச்சினையின்றி தீர்த்தல். "தலைவன் எவ்வழியோ குடிகள் அவ்வழி" என்ற கூற்றிற்கு இணங்க முன்மாதிரியாகச் செயற்படல் போன்ற முக்கியமான செயற்பாடுகளை ஆற்ற வேண்டும்.

ஆளுமை மிக்க தலைமைத்துவத்தை வளர்த்துக் கொள்வது எப்படி? என்ற கேள்விக்கு விடையாக பின்வரும் திறன்களையும் பண்புகளையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். அவற்றுள் முற்போக்கு எண்ணம், தூரநோக்குள்ளபார்வை, பங்கேற்புமுறையிலான அணுகுமுறை, முற்கூட்டிய திட்டமிடல், தேடலில் ஆர்வம், கொள்கையில் உறுதிப்பாடு, அன்பு, கருணை, பாசம், அறிவு, நுட்பத்திறன் என்பவை அடங்கும்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல்த் தம்மை

இகழ்வாரைப் பொறுத்தல் தலை"

என்ற வள்ளுவனின் கூற்றிற்கு இணங்க நிலம் எவ்வாறு தன்னை அகழ்வாரையும் பொறுக்கின்றதோ அதே போன்று தலைவராகிய ஒருவரை யாராயினும் இகழ்ந்து பேசினால் தலைவனானவன் பொறுமை என்ற பொறை உடமையைக் கையாளுதல் வேண்டும். பொறுமையில்லாதவன் இவ்வுலகில் எந்த மூலையிலும் தலைமைத்துவம் உள்ள தலைவனாக இருக்கமுடியாது. இதிலிருந்து தெரிய வருவது ஓர் சிறந்த தலைவனுக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்பு ஆகும்.

எனவே சின்னஞ்சிறார்களாகிய நாமும் இன்றே தலைமைத்துவ பண்பினை வளர்த்துக் கொள்ள வேண்டும். "இன்றைய சிறுவர்கள் நாளைய சிறந்த தலைவர்கள்" என்ற கூற்றிற்கு இணங்க செயலாற்றவேண்டும். எனவே இன்று மாணவப் பராயத்தில் நகர்ந்து கொண்டிருக்கும் நாம் காலத்தின் சுழற்சியில் எதிர்கால தலைவிதியை சுமக்க நேரிடலாம். ஆகவே பெறுமதி மிக்க மாணவ பராயத்திலேயே சிறந்த தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் கைங்கரியத்தை கைக்கொள்வோம். எதிர்காலத்தில் "தலைமை" என்ற சீரிய பொறுப்பை தாங்கத் தயாராவோம்.

"தலைமைத்துவம் இல்லாத வாழ்க்கை - தலை

இல்லாத முண்டத்திற்குச் சமன்."

என்பதனைமனதில் நிலை நிறுத்தி செயற்பட்டு வாழ்வில் வெற்றி பெறுவோமாக......

**ஜீ.ஐங்கரன்**

தரம் - 12

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானிமடமும் தொன்மையும்

ஞானிமடத்திற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கலை, கலாச்சாரம் போன்றவற்றினூடாக மக்கள் தொடர்புகள் இருந்து வந்தது. அதனால் ஞானிமடம் பூநகரிக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே போக்குவரத்திற்கான பிரதான துறைமுகமாக "நாகதேவன் துறைமுகமும், கொழும்புத் துறைமுகமும்" விளங்கி வந்தது. மக்கள் பாய்க்கப்பலினூடாக பயணம் செய்தனர். அத்தோடு தபால் பொதிகளும், கட்டடப்பொருட்களும், யாழ்ப்பாணத்திலே இருந்து பாய்க்கப்பலிலே கொண்டு வரப்பட்டன. கொண்டு வரப்பட்ட பொருட்கள் பூநகரியிலிருந்து மன்னார் வரைக்கும் மாட்டு வண்டியினிலே கொண்டு செல்லப்பட்டது. பூநகரியிலிருந்து நாகதேவன் துறைமுகமூடாக நெல்லு, வைக்கோல், பூவரசங்குழை போன்றன யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வருகின்ற மக்கள் நாகதேவன் துறைமுகத்தை கடந்து வந்து புங்கடிக் கிணற்றிற்கு அருகாமையிலுள்ள மடத்தில் தங்கிச் செல்வதுடன் 64 நாயன்மார்கள் குருபூசை செய்த மடத்தில் குரு பூசைகளைக் கண்டு களிப்பதும் வழமையாக இருந்தது.

இவ்வாறு சிறப்பு நிறைந்த எம் கிராமத்தில் 1991 - 10 - 22ம் திகதி இடப்பெயர்வுக்குப் பின்பு இவ்விடங்கள் உருக்குலைந்து போய்விட்டன. ஞானிமடத்திலே கல்வி பயில கட்டடம் ஒன்று இல்லாமையை உணர்ந்த தொண்டர் திரு சின்னப்பு இராமுப்பிள்ளை என்பவர் 1949ம் ஆண்டு தனக்குச் சொந்தமான காணியை அரசிற்கு வழங்கி அக்காணியில் ஒரு கொட்டிலைத் தடிகளால் கட்டி கிடுகினால் வேய்ந்து மண்ணினால் சுவர் வைத்து கற்பதற்கான சூழலை உருவாக்கி அரசிற்கு வழங்கினார். அதனால் 1951 - 05 - 01ம் திகதி அரசாங்கம் இப்பாடசாலையை ஏற்று அரச பாடசாலையாக மாற்றி தொடர்ந்து கற்றல் நடவடிக்கைகள் திகழ்ந்து வருகின்றது.

பிள்ளைகளின் கல்வியைக் கருத்திற் கொண்டு ஒரு சனசமூக நிலையம் தேவை எனக் கருதி செல்வராசா அவர்கள் பகுதி வாழ் மக்களை அழைத்து நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்தி 1975ம் ஆண்டு அக்காணியை பதிவு செய்து பாரதி சனசமூக நிலையத்தைக் கட்டினார். வளர்ச்சிப்பாதையில் வரும் போது சனசமூக நிலையமூடாக காந்தி சி.க.கூ சங்கம் திரு இரா.செல்வராசா அவர்களது ஆலோசனையின் பெயரால் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ் எம் ஞானிமடம் கிராமமானது பல இடப்பெயர்வுகளைக் கண்டும் மக்கள் பண்பாடு விழுமியங்களைப் பேண மறந்ததில்லை. தமிழர்களின் பாரம்பரிய அடையாளங்களை பழுதுபடாமல் பேணும் மண்வாசனை மிக்க இடமாக விளங்குகின்றது. அத்தோடு வரலாற்றுப் பதிவுகளையும் எழுர்ச்சிகளையும், மாற்றங்களையும், அர்ப்பணிப்பு நிறைந்த கிராமமாக விளங்குவதுடன், கல்வி, கலாச்சாரத்தில் சிறந்தும் விளங்குகின்றது. எமது ஞானிமட கிராமத்திலே ஆயுள் வேத வைத்தியர்கள், விஷ கடி வைத்தியர்கள், சோதிடர்கள், கல்விமான்கள், புராண இதிகாச பயன் சொல்வோர், மிருதங்கம் வாசிப்போர், அண்ணாவிமார்கள், கும்மி, கோலாட்டம், பொம்மலாட்டம், கரகாட்டம் போன்ற பாரம்பரிய கலைகள் பேணப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. பொம்மையாட்டத்தில் திரு செ.குமாரசாமி அவர்கள் சிறந்து விளங்கினார். இங்கே பச்சைப்பெருமாள், மொட்டைக்கறுப்பன் நெல்லு சிறப்புப் பெற்றதாகும். பூநகரி அரிசி என்றால் வெளிநாடுகளில் இன்றும் சிறப்புப் பெற்று மிளிர்கின்றது.

ஞானிமடம் சின்னத் தீவு கடற்கரையில் கோரிக்கைக் கட்டடம் ஒன்று காணப்படுகின்றது. இக்கட்டடத்தில் பெரிய உயர் விளக்குகள் வைக்கப்பட்டு ஒல்லாந்தர் காலத்தில் பாவிக்கப்பட்டதற்கான அடையாளங்கள் இன்றும் காணப்படுகின்றன. இவ்வாறு எமது கிராமமானது பெயருக்கு ஏற்றாற்போல் ஞானிகளும், துறவிகளும், மடங்களும், நிறைந்த இடமாகத் திகழ்ததுடன், இன்றும் சிறப்புப் பெற்ற கிராமமாக விளங்குகின்றதாகும்.

**வசந்தகுமார் பார்த்தீபன்,** கணிதப்பிரிவு ஞானிமடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசிப்பு மாதப் போட்டியில் முதலிடம்பெற்ற கட்டுரை

# வாழ்வோர் வாழ வளமளிக்கும் நூலகம்

மக்களை மக்களாக வாழ வழிகாட்டுவது கல்வி. மானிட வாழ்விலே தொடற்கரிய பெருஞ் செல்வமாக விளங்குவதும் கல்வியே கல்வி என்பது கல்லுதல், தோண்டுதல் என்னும் பொருளைத்தரும். அதாவது கற்போரின் உள் உணர்வைத் தூண்டி உள்ளார்ந்த அனுபவங்களை வெளிக்கொணர்வது கல்வி. உள்ளத்து உணர்வு தூண்டப்படுவதனால் கலை வளம் கவின் வளமாய் பிரவாகிக்கின்றது. இந்தப் பிரவாகத்தினால் உருவாவனவே நூல்கள். அறிஞர்களின் நுண்மாண் நுழைபுலனால் உருவான நூல்களைத் தன்னகத்தே கொண்டு பெருமை பெறுவதே நூலகம். ஆலயம் ஆண்டவனின் உறைவிடம். நூலகம் கலைமகளின் வதிவிடம். இரு இடமும் உள்ளே செல்வாரை மிளிர வைப்பனவே.

"ஒருமைக்கண் கற்ற கல்வி எழுமைக்கும் ஏமாப்பளிக்க வல்லதே" எனவே தான் வள்ளுவர் இன்னும் துலக்கமாக

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக" என அழகாக அளவாக ஆணித்தரமாக எழுத்தியம்பிச் சொல்கின்றார். பாடசாலைக் கல்வியானது ஒரு வரையறைக்கு உட்படுத்தப்பட்டுப் போதிக்கப்படுகின்றது. கற்போர்க்கு உலகியல் ரீதியாக மேலும் அனுபவக் கல்வியும் கிடைக்கின்றது. இதற்கு அடுத்த படியாக மக்கள் கற்க வேண்டிய நூல்களைக் கற்றுக் கற்றபடி ஒழுக வழிகாட்டுகின்றது. மேலும் பாடசாலைக் கல்வியானது ஒரு பருவத்தார்க்கு என்ற வரையறையோ கால வரையறையோ அற்றது. அனைவரும் கல்வி பெற வாய்ப்பளிப்பது. இந்த வாய்ப்பை கற்றோர் அருமையான வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும்.

வாசிப்பே ஒரு மனிதனை முழு மனிதனாக்க வல்லது என்பது முடிந்த முடிவு; அனுபவ உண்மை. மக்கள் கற்க வேண்டிய நூல்களைக் கற்று அதனால் சிறந்த சமுதாயம் உருவாக வேண்டும் என்ற நோக்கத்திற்காக பாடசாலை நூலகங்களும், பொது நூலகங்களும் பெரும் பணியாற்றுகின்றன. வாழ்க்கைச் செலவு வளர்ந்து கொண்டிருக்கின்ற இன்றைய கால கட்டத்திலே எல்லோராலும் எல்லா நூல்களையும் விலை கொடுத்து பெற்றுப் படிக்க முடியாது. இந்த நிலையிலே எல்லோரதும் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் நூலகங்களே கைகொடுத்து உதவுகின்றன என்பதை எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இன்னும் உயர் கல்வித் துறையைக் கற்போருக்கு உரிய நூல்களை சொந்தமாக பெற்றுக் கொள்வது மிக மிகக் கஷ்டம். இந்த நிலையில் நூலகங்களே அவர்களுக்கு பெரிதும் துணைபுரிகின்றன.

மேலும் நூலகத்திற்கு நாம் சென்றால் அங்கே பிளேட்றோ, ரூசோ, சோக்கிரட்டீஸ் போன்ற தத்துவ ஞானிகளுடைய சிந்தனைகளையும் கம்பர், வள்ளுவர், ஒளவையார் போன்ற இலக்கிய மேதைகளுடைய படைப்புக்களையும் சம்மந்தர், அப்பர் போன்ற சமய ஞானிகளுடைய தோத்திரங்களையும் சித்தாந்த ஞானிகளின் தரிசனங்களையும் மகாத்மா காந்தி, பாரதியார் போன்ற சமூக முற்போக்காளர்களின் வழிகாட்டல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானியலாளர்களுடைய ஆய்வுகளையும் சமூகத்திடையே கருவூலங்களைப் பெற்று எழுதும் முற்போக்கு எழுத்தாளர்களுடைய ஆக்கங்களையும் இன்னும் எத்தனை எத்தனையோ துறை சார்ந்த மொழிசார்ந்த வல்லுநர்களுடைய படைப்புக்களையும் சீர் திருத்தக் கொள்கைகளையும் தரிசனங்களையும் நாம் காண முடிகிறது; படிக்க முடிகின்றது. பரீட்சையில் சித்தி பெற முடிகின்றது; அறிவை வளம் படுத்தி வாழ்வை மெரு கூட்ட முடிகின்றது. அறிவுப் பெரியோரும் திருவாரூரும் என்பர். அது போல பொழுது போவதோடு அறிவும் வளரும்.

நமது வாழ்வு வளம் பெறுவதற்காகத் தமது முன்னோர்கள் தாம் பெற்ற இன்பம் இவ் வையகமும் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கோடு படைத்து வைத்த அரும் பெரும் கருவூலங்களைக் கொண்ட நூலகங்களைக் எமது உயிரெனப் பேணிப் பாதுகாத்தல் நமது கடமை. பயன் பெறுவது நமது உரிமை. அரும் பெரும் கருவூலங்கள் உலகில் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் தேடிக் கொண்டு வந்து நூலகத்திலே நிறைத்தல் எமது சேவை. நம் போல நம் "பின்னவரும் பயன்பெறும்" வண்ணம் பாதுகாப்பது நமது பொறுப்பு."

இன்றைய கால கட்டத்தில் நூலகங்களை வளர்ச்சி பெற்ற நாடுகளிலே பல்வேறு வசதிகளுடன் விளங்குகின்றன. வளர்முக நாடுகளிலும் நூலகங்கள் பல இருப்பினும் பலவற்றிலே நவீன வசதிகள் குறைவாகவே உள்ளன. ஆனால் எங்களுக்குக் கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன்படுத்தி நூலகங்களை அமைப்பது மட்டுமன்றி அவை தொடர்ந்து நன்கு இயங்குவதையும் கவனித்தல் அவசியம். நூலகங்களைப் பலரக வாசகர்களும் பயன்படுத்துவதால் அவரவர் ஈடுபாடுகளுக் கேற்ப நூல்களும் பிற பிரசுரங்களும் இடம் பெறல் அவசியமே. மாணவர்கள், ஆசிரியர்கள் ஏனைய கல்வி ஆர்வலர்கள் முதியவர்கள் எனப் பலவகை வாசகர் உள்ளனர். இத்தகையோரின் ஈடுபாட்டிங்கேற்ப நூல்கள் இடம் பெறில் இவர்கள் தத்தம் ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையிலே கழிக்க வாய்ப்புக்கள் ஏற்படும். சமூகத்திலே வாசிப்புப் பழக்கம் அதிகரிக்கும் அறிவு வளம் பெறும்.

நூலகங்கள் நிறவனங்களின் ஆதரவிலோ அல்லது தனிப்பட்டவர்களின் ஆதரவிலோ இருந்தாலும் அவை இருக்கும் பிரதேசங்களிலே இருந்தாலும் அவை இருக்கும் பிரதேசங்களிலே வாழும் மக்களுக்கு வரைப்பிரசாதமாக விளங்குவன பலதரப்பட்ட மக்களின் அறிவுத் தேடலுக்கான கற்பகத் தருவாகவும் அவர்களின் அறிவுத் தாகத்தை தணிக்கும் வற்றாக சுணைகளாகவும் அறிவைப் பெருக்கும் அரு நிதிக் களஞ்சியமாகவும் அவை விளங்குவதால் சாலச்சிறந்ததாகும்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், எப்பொருள் எத் தன்மையாயினும் அப்பொருளின் மெய்பொருள் காண்பது அறிவாமாகலின் நூல்களின் உள்ளே வாதித்திருக்கும் உண்மைக் கருவூலங்களை ஆராய்து, எமக்கு ஏற்றன பெற்று வாழ்வை வளம்படுத்த வேண்டும். எனவே நூலகத்தின் பயன்பாடுகளை உணர்ந்து கற்க வேண்டிய நூல்களை நூலகங்களிலே தேடிப்பெற்றுக் கற்று எம் வாழ்வை செம்மைப்படுத்துவோமாக.

**க. கனிமொழி**
தரம் 10
கிளி/செல்லியா தீவு அ.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு

எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது கல்வியே! கல்வியானது திருடர்களால் திருட முடியாது. நெருப்பினால் எரிக்க முடியாது. ஏனையோருக்குக் கொடுக்கக் கொடுக்க குறைவுபடாது. கல்வியானது கற்பிக்கப் பெருகிக் கொண்டே செல்லுமன்றி ஒரு போதும் குறையாது. அரசனுக்கோ தன் நாட்டில் மட்டும் தான் சிறப்பு. ஆனால் கல்வி கற்றவனுக்கோ செல்லும் இடமெல்லாம் சிறப்புக் கிட்டும். இதனால் தான் சகோதரர்களே மூதுரையைத் தந்து ஔவைப்பாட்டி அன்று அழகாகக் கல்வியின் சிறப்பை எமக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

இப் பூவுலகிலுள்ள செல்வங்களிலெல்லாம் சிறந்த செல்வமான கல்விச் செல்வத்தை நாம் கருத்துடன் கற்றல் அவசியம். கல்வியைத் தெளிவுடன் கற்கும் போது அறிவு வளர்ச்சி பெறுகின்றது. அறிவு வளர்ச்சி ஏற்பட ஏற்பட மனிதன் நாளுக்கு நாள் நவீன நுட்ப முறைகளை கண்டு பிடிக்கிறான். புதிய புதிய சாதனைகளை நிலை நாட்டுகின்றான். இவ்வாறு ஒவ்வொரு நுட்பத்தையும் கண்டு பிடித்து சாதனைகளை நிலை நாட்டும் போது அவன் எல்லோராலும் போற்றப்படுபவனாக விளங்குகின்றான்.


"எண்ணென்ப ஏனைய எழுத்தென்ப

இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்று கூறிய பெரியோரின் வாக்கிற்கிணங்க கண்ணான கல்வியை நாம் கருத்தோடு கற்கையில் எமது வாழ்வு என்றும் வளம் பெறும். கற்றவர் நன்மை எது தீமை எது என்று ஆராய்ந்தறியும் ஆற்றல் கொண்டர். அதனால் உலகப் பொது மறையை இவ்வுலகிற்கு உவந்தளித்த தெய்வப்புலவரும்

"கண்ணுடைய ரென்பர் கற்றோர்

முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லாதவர்" என்று கூறியுள்ளார். எண்ணும் எழுத்தும் இரு கண்களைப் போன்றது. இவ்வாறான இரு கண்களைப் போன்றது இவ்வாறான இரு கண்களையும் கற்பதனால் மனிதன் எந்த இடத்திலும் போற்றப்படுகிறான்.



இத்தகைய உயர்வான கல்வியை நாம் இளமையிலே கற்றல் வேண்டும். இளமையில் கற்கும் கல்வியானது நன்கு மனதில் பதியும். இதனாலன்றே நம் ஆன்றோரும் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்று கூறிச் சென்றுள்ளனர். கல்லில் செதுக்கிய சிற்பம் எவ்வாறு மறையாது இருக்கின்றதோ அது போன்று தான் இளமையிற் கற்கும் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு நினைவில் நிற்கும். கல்வியைச் சிறப்பாக கற்பதனால் எத்தொழில் செய்யினும் சிறப்பு உள்ளது. அத்தோடு மேன்மை அடையலாம். கல்விச் செல்வத்தை பெற்றோருள் பயனடையாமல் இருப்பவர் என்று யாரும் இருக்க முடியாது. ஒவ்வொருவரும் ஏதோவோர் மூலையில் ஏதோவோர் துறையில் முன்னேறியவர்களாகத்தான் இருப்பார்கள். ஒருவனிடம் எவ்வளவு செல்வங்கள் இருந்தாலும் கல்விச் செல்வமே மிக முக்கிமானது.

ஒருவனிடம் பணம், நகை என்று எது அதிகளவாக இருந்தாலும் அவன் வசிக்கும் இடத்தில் மட்டுமே அவனுக்கு சிறப்புக் காணப்படும். ஆனால் கற்றவனுக்கு எங்கு சென்றாலும் ஒரு மதிப்பு உள்ளது. இவ் மண்ணுலகில் எத்தனை ஆய்வுகள் நடந்தாலும் விண்ணுலகில் கோடான கோடி ஆய்வுகள் நடந்தாலும் அவை அத்தனைக்கும் மூலதனமாய் முதலிடம் நிற்பது கல்விச் செல்வம் தான். ஒருவன் நன்றாக கல்வியை கற்பதனால் தான் ஆய்வாளராகிறான். அவன் ஒரு சாதனையை படைக்கும் போது அவனைப்பற்றிய எல்லாத் தகவல்களும் பத்திரிகை, இணையத்தளம் என்பவற்றிலிருந்து வெளிவருகின்றன. அவ்வாறு தகவல் வரும் போது அத்தகைய மக்கள் அறிந்து செல்லுமிடமெல்லாம் அவனுக்கு சிறப்புக் கிட்டுறது.

கல்வி கற்று சென்ற இடமெல்லாம் சிறப்பு வாங்கிய திருவள்ளுவரைக் குறிப்பாக நோக்குவோம். வள்ளுவர் மாபெரும் கல்வியாளராக இருந்திருக்க வேண்டும். பற்பல மொழிகளை அறிந்தவராகவும் இருந்திருக்கக் கூடும். இல்லாவிட்டால் உலக மொழிகள் அனைத்திலும் ஈடு இணைசொல்ல முடியாது ஒப்பற்ற திருக்குறளை அவரால் எவ்விதம் படைத்திருக்க முடியும். தம் அறிவும் செழுமைக்கும் காரணம் தாம் கற்ற கல்வியே என்பதையும் அவர் புரிந்து கொண்டிருப்பார். அதனால் தான் கல்வியின் பெருமையை விளங்கி தம் திருக்குறளில் நாற்பதாம் அதிகாரமாக ஒரு தனி அதிகாரத்தை படைத்தார்.

"பஞ்சாங்கத்தில் மழை எப்போது வரும்" என்று போட்டிருக்கும். அதனால் தான் நாம் பல விடயங்களை அறிந்து கொள்கிறோம். ஆனால் பஞ்சாங்கத்தை பிழிந்தால் ஒரு சொட்டு தண்ணீர் கூட வராது! பின்பற்றபடாத தகவல் அறிவு மனிதர்களிடையே எந்த வளர்ச்சியையும் ஏற்படுத்தாது. அதே போல் கல்வியையும் பயனுள்ளதாக கற்க வேண்டும். அவ்வாறு கற்கும் போது பலர் போற்றும் ஒருவராக நாம் விளங்குகிறோம். கல்வி எனும் அப் பெருஞ்செல்வம் இல்லா விடின் பிற செல்வங்கள் என்ன? ஆய்வுகள் என்ன? கண்டு பிடிப்புக்கள் என்ன? இவை எல்லாம் எட்டாக் கனிதான். செல்வத்துட் செல்வமான கல்விச் செல்வத்தைப் பெற்றோமானால் நாம் விரும்பும் எத்தொழிலையும் செய்யலாம்.

கல்விகற்றாலும் அதைப் பயனுள்ளதாகக் கற்க வேண்டும். கல்வி மூலம் தீயவற்றை செய்யக் கூடாது. அவ்வாறு கல்வியை பயனுள்ளதாகக் கற்கும் போது ஒரு மனிதன் எவ்வளவோ சிறப்புக்களை அனுபவிக்கிறான். நாம் கற்ற கல்வியை மற்றவர் இனங்கண்டு நாம் எங்கு சென்றாலும் சிறப்பைப் பெற வேண்டும். ஆகவே "கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பதையுணர்ந்து நல்ல வழியில் கடல் போன்ற கல்வியைக் கருத்தோடு கற்று நலம் பல பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.

க. டிலக்சனா

தரம் - 09

கிளி/கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு மாதப் போட்டியில் முதலிடம்பெற்ற

# துண்டுப்பிரசுரம்



வாசிப்பதால் மனம்
வானத்தைப்போல்
விசாலமடைகிறது
புத்தகங்கள் என்பது
உறக்கம் வராமல்
புரட்டுவதற்கு அல்ல
நம்மை புரட்டிப்
போடுவதற்கு ஆகும்.

## அறிவே ஆற்றல்

அன்பான பொது மக்களே !
வாசிப்போம், வாழ்வோம்
நல்ல நூல்களைவிட சிறந்த நண்பன்
யாரும் இவ்வுலகில் கிடையாது
எனவே புத்தகங்கள் இல்லாமல்
புரட்சிகள் சாத்தியமில்லை
புத்தகப் புழுக்களால் பூவும் பூப்பதில்லை என்பதை
இன்றைய இளைய சமூகம் உணர வேண்டும்
வாசிப்பை நேசிப்போம், வாசிக்கத் தூண்டுவோம்
நூல்களின் ஆதிக்கத்தை அகத்தில் விதைத்து
புத்தக வாசிப்பு என்னும் ஊக்கத்தை
உழைப்பாய் தருவோம், வாழ்வில் உயர்வோம்
நாளைய தலைமுறை நல்லுலகம் காணட்டும்
அறிவின் ஆற்றலை அறிவியலும் காணட்டும்.

நூல்களை வாசிப்பதனால்
ஏற்படும் நன்மைகளாவன
பொழுதைச் சிறப்பாகப்
போக்க வாசிப்போம்
தகவல்களை சேகரிக்க
வாசிப்போம்
நல்லெண்ணங்களை
சேகரிக்க வாசிப்போம்
நயவஞ்சகர்களையும்
நல்லவராக்க வாசிப்போம்

**வெளியீடு-முத்தமிழ் மன்றம்**
ச. அனுசாளினி
தரம் 11
கிளி/செல்லியாதீவு அ.த.க பாடசாலை

வாசிக்காதவன் அறிவில் ஏழையாக இருக்கிறான்
வாசித்தவன் அறிவில் செல்வந்தனாக இருக்கிறான்
வாசிப்பவனை உலகம் தேடுகிறது
வாசிக்காதவனை உலகம் விட்டோடுகிறது
வாசிப்பைச் சுவாசி, வாசிப்பை நேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒற்றுமையே பலம்

முன்னொரு காலத்தில் சஞ்சீவா என்னும் அரசன் தனது நாட்டை செழிப்புடன் வைத்திருந்தான். நாட்டு மக்களின் தேவைகளை மிகவும் அக்கறையுடனும் அன்புடனும் பூர்த்தி செய்த போதும் தனது நாட்டு மக்கள் எவ்வாறான பண்புகளுடன் இருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ள ஒரு போட்டி வைக்கலாம் என முடிவு செய்தான்

ஒரு நாள் அரசன்.............

அந்த நாட்டு மக்களுக்கு ஒரு போட்டி வைத்தான். அதில் நாட்டு மக்கள் அனைவரும் அந்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். அப்போது அந்த நாட்டு அரசன் எல்லோரும் வெற்றி பெற்றவுடன் ஆச்சரியம் அடைந்தான். அந்த நாட்டு அரசனுக்கு இவர்கள் எல்லோரும் அக்கறையுடனும் அன்புடனும் ஒற்றுமையுடனும் இருப்பதை பார்த்து சந்தோசம் அடைந்தான். ஒரு நாள் அந்த நாட்டு அரசன் மக்கள் எல்லோரும் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பதை அவதானித்தான். அந்த அரசன் தான் வைத்த போட்டியில் எப்படி எல்லோரும் வெற்றி பெறுவார்கள் என யோசித்தான் ஒவ்வொரு நாளும் அப்படியே யோசித்துக் கொண்டே இருந்தான். அந்தநாட்டு மக்கள் அனைவரும் அந்த சஞ்சீவா என்ற அரசனை ஒவ்வொரு நாளும் அவதானிப்பார்கள். ஒரு நாள் அந்த நாட்டு அரசன் ஏன் யோசித்தான் என்று மக்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவராகக் கேட்டனர் ஒருவருக்கும் தெரியாது அரசனிடமே கேட்போம். என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எல்லோரும் கூறினர். அவர்கள் எல்லோரும் அரசனிடமே நீங்கள் ஏன் ஒவ்வோரு நாளும் ஒரே யோசனையாக இருக்கிறீர்கள் என்று கேட்டனர். அப்போது அந்த சஞ்சீவா அரசன் சொன்னான் . நீங்கள் எல்லோரும் எப்படி வெற்றி பெற்றீர்கள் என்று கேட்டான். அப்போது அந்தநாட்டு மன்னனுக்கு மக்கள் அனைவரும் நாங்கள் அனைவரும் எப்படி வெற்றி பெற்றோம் என நீங்களே கண்டு பிடியுங்கள் என்று கூறினார்கள். அந்த சஞ்சீவா அரசனுக்கு ஒரே குழப்பமாகவே இருந்தது. தான் வைத்த போட்டி கடினமான போட்டி ஆகும். ஆனால் இவர்கள் எல்லோரும் எப்படி வெற்றி பெற்றனர். பெரியவரிலிருந்து சிறியவர்கள் அனைவரும் எப்படி வெற்றி பெறுவார்கள் என்று ஒரே யோசனையில் இருந்தார். அந்த நாட்டு அரசன் இன்னுமொரு முறை போட்டி வைத்தான் . அந்தப் போட்டியில் யாரும் வெற்றி பெறவில்லை. அந்த மன்னனுக்கு பெரிய குழப்பமாக இருந்தது. கடினமான போட்டியில் எல்லோரும் வெற்றி பெற்றனர். இப்பொழுது நடந்த போட்டி இலகுவான போட்டி ஆனால் இந்தப் போட்டியில் யாரும் வெற்றி பெறவில்லை. அந்த நாட்டு அரசன் அந்த நாட்டு மக்களிடம் இலகுவாக நடந்த போட்டியில் யாரும் வெற்றி பெறவில்லை. கடினமாக நடந்த போட்டியில் எல்லோரும் எப்படி வெற்றி பெற்றீர்கள் என்று வினாவினான். மக்கள் அனைவரும் நாங்கள் முதலாவதாக நடந்த போட்டியில் நாங்கள் ஒற்றுமையாக போட்டியில் கலந்து கொண்டோம். இப்போது நடந்த போட்டியில் நாங்கள் தனித்தனியாகப் போட்டியில் கலந்து கொண்டோம். அதனால் தான் நாங்கள் முதலாவதாக நடந்த கடினமான போட்டியில் வெற்றி பெற்றோம். எல்லோரும் தனித்தனியாகக் கலந்து கொண்டதால் தான் இந்த இலகுவான போட்டியில் நாங்கள் வெற்றி பெறவில்லை. அந்த நாட்டு மக்கள் அரசனிடம் இப்பொழுது உங்கள் சந்தேகம் தீர்ந்து விட்டதா? எனக் கேட்டனர். அந்த நாட்டு மன்னன் கூறினான் இப்பொழுது என் சந்தேகம் எல்லாம் தீர்ந்து விட்டது எனக் கூறினான். அந்த நாட்டு மக்கள் அனைவரும் இப்படித்தான் வெற்றி பெற்றோம் என்று அனைவரும் கூறிக்கொண்டே இருந்தனர். அப்போது அந்த சஞ்சீவா அரசன் எனக்குப் புரிந்து விட்டது எனக் கூறினான். அப்போது அந்த நாட்டு மக்கள் அனைவரும் இப்படித்தான் நாங்கள் வெற்றி பெற்றோம் எனக் கூறினார்கள். அப்போது அந்த நாட்டு மன்னன் கேட்டான் நீங்கள் ஏன் இந்தப் போட்டியில் தனித்தனியாகக் கலந்து கொண்டீர்கள் நாங்கள் ஒரு போட்டியை ஒற்றுமையாகவும் ஒரு போட்டியை தனியாகவும் கலந்து கொண்டோம். நாங்கள் வெற்றி பெற்றது ஒற்றுமையாகக் கலந்து கொண்ட போட்டியில் என்று நாங்கள் அறிந்து கொண்டோம். ஒற்றுமையே பலன் தரும்.

**அனுன்ராஜ் டிசானா**
தரம் - 04
கிளி/பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு மாதப் போட்டியில் முதலிடம்பெற்ற சிறுகதை



# வாசிப்பை மனதில் விதைப்போம்......

தபால்காரன் பெல் ஒலித்தது. படுக்கையில் புரண்டபடி "சத்தியா தபால் வந்திருக்கு போய்ப் பாருங்க" என தன் அன்பு மகளுக்கு கூறியவாறு சோம்பல் முறித்தான் இரத்தினம். தந்தை கூறியதை தன் அறையில் இருந்து கேட்ட சத்தியா வாசலை நோக்கி நகர்ந்தாள். "சத்தியா யாரம்மா" என தபாற்காரன் கேட்டதும் "ஐயா நான் தான்" என்று கூறியபடி கடிதத்தை பிரித்துப் பார்த்தாள். அவள் கண்களில் கண்ணீர் கசிய தன் மகிழ்ச்சியை கூற வார்த்தை இல்லாமல் திகைத்து நின்றாள். சத்தியாவின் நினைவுகள் கடந்த காலம் நோக்கி நகர்ந்தன.

வயல் வெளிகளும் சோலைகளும் நிறைந்த நல்லூர் எனும் கிராமத்திலேயே இரத்தினம் என்பவரிற்கும் வேதாரணிக்கும் சத்தியா, சரணியா என இரு பெண் பிள்ளைகள். இதில் சத்தியா முதற் குழந்தையாக பிறந்தவள். என்பதால் இரத்தினம் சத்தியா மீது பாசத்தை கொட்டி வளர்த்திருந்தார். அவளும் தாய் தந்தை மீது அதீத பாசம் கொண்டவளே. அழகிலும் அறிவாலும் சிறந்து விளங்கினாள்.

தனது சிறு வயதிலே கதைப்புத்தகங்களை தேடித் தேடி வாசிப்பதில் ஆர்வம் கொண்டவளாகவும் அதிகளவான புத்தகங்களை வேண்டுவதற்கு போதிய பணவசதி இல்லாததனால் அனேகமாக நூலகத்திலே வாசிப்பவளாகவும் விளங்கிய சத்தியா தனது ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் ஒரு இடைநிலைப் பாடசாலையில்க் கற்றாள். தொடர்ந்து கல்வியைப் பெறுவதற்காக நகரம் நோக்கி இடம் பெயர வேண்டியதாயிற்று. உயர்நிலைக் கல்வியைக் கற்பதற்கு கிராமத்திலே பாடசாலை இல்லாததால் குடும்பத்துடன் நோக்கி இடம் பெயர்ந்து வந்தனர். சத்தியா உயர் தரம் படிப்பதற்காக ஓர் உயர் நிலை கல்லூரியில் சேர்ந்தாள். கல்லூரிக்கு சேர்ந்த முதல் நாள் சற்றுப் பயத்துடனேயே வளாகத்தினுள் காலடி எடுத்து வைத்தாள். அப்பாடசாலையில் உள்ள எவற்றையும் பற்றி விளக்கம் இல்லாத சத்தியா தன் சக மாணவர்களுடன் வகுப்பில் அமைதியாக இருந்து வீடு சென்றாள். இவ்வாறாக நாட்கள் சில சென்றது. தாம் குடியமர்ந்த வீட்டிற்கு அருகருகே உள்ள வீடுகளில் வானொலி தொலைக்காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிகள் எந்நேரமும் ஒலித்துக்கொண்டிருந்தது. இவ்வாறாக நாட்கள் சில சென்றன. பாடசாலையில் நூலகத்திற்குச் செல்லும் மாணவர்கள் குறைவாகக் காணப்பட்டனர். புத்தகங்கள், பத்திரிகைகள் பற்றிய யோசனைகள் இல்லாத நகர மக்கள் நவீன வாழ்க்கையையே வாழ்ந்தார்கள்.

சத்தியா வீட்டில் பல புத்தகங்கள், பத்திரிகைகள் என வாசிப்பதற்கு பல வழிகளை தன்னிடம் வைத்திருந்தாள். தன் தங்கை தரணியா அவ்வளவுக்கு வாசிப்பில ஈடுபாடு கொள்ளவில்லை என தான் தேடி வாசிப்பதில் குட்டிக் கதைகள், உலக அதிசயங்கள், விளையாட்டுச் செய்திகள் என பல்வேறு துறை சார்ந்த விடயங்களை எடுத்துக் கூறினாள். இவ்வாறாக அவளின் தங்கைக்கும் வாசிப்பதில் ஈடுபாடு வந்தது. இரத்தினம் தினமும் பத்திரிகைகள் வாசிப்பதும் வேதாரணி சமையல் குறிப்புக்கள், கைத்தொழில் முயற்சிகள் உள்ள புத்தகங்களை வாசிப்பதும் இவர்களின் வழக்கமாக இருந்தது. அவ்வாறாக தமது பிள்ளைகளையும் வானொலி, தொலைக்காட்சி என மட்டும் விடாது வாசிப்பில் ஆர்வம் காட்டி வளர்த்தார்கள். சத்தியா கற்றிருந்த பாடசாலையில் வாசிப்புக் குன்றியிருந்ததற்கான காரணங்களை அறிந்து ஆசிரியர்களோடு ஒத்துழைத்து செயற்பட்டு வாசிப்பினால் வரும் பயன்களை ஏனைய மாணவர்கள், பெற்றோர்களுக்கு தெரியப்படுத்தி வாசிப்பு பழக்கத்தை வளர்ப்பதற்கான வழிமுறைகளைப் பின்பற்றினார்கள். இவற்றில் புத்தகக் கண்காட்சிகள், பெற்றோரின் ஊக்குவிப்புக்கள், இணையப்பயன்பாடுகள் என்பன முக்கியமாக இருந்தது.

யுனிசெப் பிரகடனப்படுத்திய "ஒக்ரோபர் மாதம் வாசிப்பு மாதம்" என்பதை கருத்தில் கொண்டு நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் அனேக மாணவர்கள் பங்கு பற்றினார்கள். அதில் சிறுகதைப் போட்டியில் சத்தியா முதலிடத்திலும் சரணியா வாசிப்பு போட்டியில் முதலிடத்திலும் கிடைத்தது. அனைவருக்கும் பெரு மகிழ்வைத் தந்தது. இதனைப் போலவே தம் பிள்ளைகளும் வரவேண்டும் என நினைத்த பெற்றோர்களின் வீட்டில் நவீன சாதனங்களின் ஒலிகள் குறைய வாசிப்பின் ஒலிகள் மிகுந்தது. இவ்வாறாக நாட்கள் சென்றது. சத்தியாவின் கல்வியும் தொடர்ந்தது. தந்தை தாய் வயதாகியது. சரணியும் கல்வியில் தொடர இவர்களுக்கு போதிய பணம் கிடைக்காமையால் சத்தியா வேலை செய்வதற்கு படிவம் அனுப்பியிருந்தாள்.

மீண்டும் இரத்தினம் "சத்தியா என்னம்மா" எனக் கேட்டதும் சுயநினைவுக்கு வந்தாள் சத்தியா. கடிதத்தை மீண்டும் பார்த்து தன் தந்தையிடம் காட்டினாள். அதில் சத்தியாவின் திறமையைப் பெற்றோர்கள், பாடசாலை சமூகம் ஒன்றிணைந்து தங்கையையும் தன்னையும் வாசிப்பு மாத விழாவின் விருந்தினராக சிறப்பிக்கவும் ஜனாதிபதினால் கற்றலுக்குத் தேவையான பண வசதியைப் பெறவும் அழைப்புக் கிடைத்தது. இதைவிட வேறென்ன வேண்டும் என மனம் குளிர்ந்த இரத்தினமும் வேதாரணியும் தம் பிள்ளைகளை அன்போடு அணைத்தார்கள். அங்கே பல உறவுகள் சத்தியா குடும்பத்தின் நன்மைக்காக அவர்களை நினைவுகளைத்தாங்கி வாழ்கிறார்கள். வாசகர்களே "வாசிப்பினால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற வாசகத்தினை ஒவ்வொருவர் மனதிலும் விதைப்போம் முற்றி அறுவடையாகும் நாளை எண்ணி.

**சிவசண்முகராசா கனிநிலா,** தரம் 11 கிளி/செல்லியாதீவு அ.த.க பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீதி விபத்தை பாதுகாப்போம்

அதிகாலை நாலரை மணியளவில் வழமை போல் விழித்தெழுந்த வேலாயுதம் தினமும் இறை பக்தி கொண்டவன். கடவுளை தொழுது மெல்லெள தனது தலையருகில் உள்ள செம்பினை எடுத்து நீரை பருகியதும் மனைவி பரிமளத்தை சற்றுத் தலை குனிந்து பார்த்து தன் கையால் தட்டிக் கொடுத்து நித்திரையை விட்டு எழுமாறும் தினமும் அவள் தொடுகை உணர்ந்த பரிமளம் படுக்கை விட்டு எழுந்து இறைபக்தி வேண்டிசமையலறை நோக்கி சென்றவளாக அடுப்பை பற்ற வைத்து தேனீர் தயாரிக்க முட்பட்டவளாய் மாரி மழையில் நனைந்து ஊறிக் கிடந்த விறகை அடுப்பின் அருகில் இரவு நித்திரைக்கு செல்லமுன் வெப்பத்தில் உலர வைப்பதை மறந்தவளாய் தன் மனதுக்குள் புறுபுறுத்தவளாய் தேனீர் தயாரித்தாள்.

வேலாயுதமும் என்னதான் இல்லாது விட்டாலும் அதி காலையில் ஒரு தேனீர் பருகாது விட்டால் வேலாயுதம் படும் பாடு பரிமளம் நன்கு அறிந்தவளாய் தேனீரை எடுத்து அன்புடன் இரு கைகளால் கணவன் வேலாயுதத்திடம் பரிமாறினாள். தேனீரை குடித்து விட்டு வெளி வாசற்கதவை திறந்தவனாய் அதிகாலை 5.00 மணிக்கு சந்தி அம்மன் கண்ணகையின் திரிந்தாதி மணி அடிப்பதற்காக செல்வதற்கு புறப்பட்டவனாய் மாமரத்தின் அடியில் சாத்தி நின்ற ஈருருளியை எடுத்துக்கொண்டு வீதி வழியாக கோயிலை சென்றடைந்தான்.

சிறிது நேரத்தில் திரிந்தாதி மணி ஓசை ஊரெல்லாம் ஓசை எழுப்பத் தொடங்கியதும் அம்மன் ஆலய வாசலில் இருந்து பக்திப் பாடல் ஒலித்தது. பரிமளம் பெரு மூச்சுவிட்டு தனது மகன் படுத்துறங்கும் படுக்கையறையை பார்தவளாய் அதிகாலையில் எழுந்து படிக்கும் பழக்கம் கொண்ட மகன் மதன் நேற்று அதிகாலை வீட்டிலிருந்து சென்றவன் இன்னும் வரவில்லை என்பதும் அவளுக்கு வேதனையாக இருந்தது. உயர் கல்வி கற்கும் நண்பர்களுடன் செல்வதாகக் கூறிச் சென்றவன் எங்கு செல்கின்றேன்? ஏன் செல்கின்றேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைப்பற்றி பரிமளம் கதைக்க முடியாதவாறு கட்டுங்கடங்காது தந்தையின் சொல் சேட்காது நடந்து கொள்வதும் அவளுக்கு மேன் மேலும் வேதனையாக இருந்தது. கடவுளின் மேல் அவனின் பாதுகாப்பை வைத்து எழுந்து சமையலறையில் காலை உணவு தயாரிப்பதற்காய் ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள்.

பல நாட்களாக வீட்டின் வெளிக் கதவின் பிணைச்சல் எண்ணெய் தண்ணி இல்லாது திறக்கும் போது வரும் சத்தம் அவள் காதில் கேட்கவே வாசலை சமையலறை சாளரம் ஊடாக தன் பார்வையை செலுத்தினாள். வேலாயுதம் கையில் பத்திரிகையுடனும் நெற்றியில் பக்திப் பரவசம் கொண்ட வெண்ணிற திருநீறும் ஒருகட்டி சந்தணத்தை எடுத்து வந்தார் போல் நெற்றியில் பொட்டுடனும் வருவதைக் கண்ட பரிமளம் தன் கணவன் கொண்ட இறைபக்தி எம்மை ஒருபோதும் கை விடாதென நினைத்தவளாய் வேலைகளை விறுவிறுவென செய்யத் தொடங்கினாள்.

ஈருருளியில் வந்த வேலாயுதம் மாமரத்தின் கீழ் விட்டுவிட்டு பத்திரிகையுடன் வீட்டின் முன் மண்டபத்தில் உள்ள சாய்மனைக் கதிரையில் அமர்ந்தவனாய் பத்திரிகையை புரட்டிப் பார்த்தவனாய் பல தலைப்புச் செய்திகள் கொண்டுள்ள பத்திரிகையினை இரண்டு பக்கத்தினைக் கொண்ட வீதி பாதுகாப்பு வாரம் தொடர்பான கணிப்புக் கட்டுரைகள் ஆசிரியர்களினால் எழுதப்பட்டதை புரட்டி படித்தான். அதில் கணிப்பீட்டின் படி ஆண்டு ஒன்றுக்கு எமது நாட்டில் 24% கொண்டவர்கள் விபத்தினால் இறக்கின்றனர். அதிலும் 18% ஆனவர்கள் வாலிப வயதனைக் கொண்ட இளைஞர்களாவார்கள் எனக் குறிப்பிடப்பட்டதை சற்றுப் பார்த்து நின்ற வேலாயுதம் மனம் பெரும் பாரசுமையாக இருந்தது. தான் பெற்ற நான்கு பிள்ளைகளில் கடைசி மகன் சொல் வார்த்தை கேட்காது நடந்து கொள்ளும் விதம் இதைப் போன்ற எத்தனை பெற்றோர்கள் பிள்ளைகளால் படும் பாடு என நினைத்தான்.

"பரிமளம் பரிமளம்" "என்னப்பா மதன் போன் எடுத்தவனே" என பரிமளத்தை நோக்கி கேள்வி தொடுத்தான். பரிமளமும் இரங்கியவாறு "இல்லைங்கோ நேற்றுத் தொடக்கம் இது வரைக்கும் தொலைபேசி எடுக்கேலை" மன வேதனையில் கூறினாள். அவளின் வேதனையை புரிந்தவனாய் வேலாயுதம் அமர்ந்திருக்க மூத்த மகன் செல்வம் பிரான்சிலிருந்து தொலைபேசி வழியாக அழைப்பை தொடுத்தான். வீட்டின் மேசையில் கிடந்து ஒலித்த தொலைபேசியை எடுத்து வருமாறு பரிமளத்தை அழைத்து வேலாயுதம் அழைப்பை ஏற்றவனாக மறுமுனையில் மகன் செல்வம் "அப்பா எப்பிடி சுகமாய் இருக்கிறியளோ" என்றதும் "ஓம் நான் நல்ல சுகம் அம்மாவும் இருக்கிறா பக்கத்தில" என்றதும் பரிமளத்தின் முகத்தில் ஆயிரம் மின்மினிப் பூச்சிகள் ஒளிர்வதைப் போன்ற பிரகாசம் கொண்டவளாய் "தம்பி மகனே பிள்ளைகள் சுகமாக இருக்கோ" என்றதும் மகன் "ஓமம்மா சுகமாக இருக்கினம் எல்லாரும் நித்திரை நான் இப்பதான் அம்மா வேலை முடிச்சு வந்தனான்" என்று கூறி தந்தைக்கு பயந்தவனாயும் தம்பியில் அதிக பாசம் கொண்டவனாயும் கதையை தொடங்கினான். "அப்பா தம்பி எங்க" என்றதும் தந்தையின் குரலில் தடுமாற்றம் கண்டவன் "சரிசரி அவன் ஆரும் நண்பர்களோட போயிருப்பான் வந்திடுவான்" என்று கேள்வியையும் தொடுத்து விடையையும் தானே தந்தைக்கு கூறினான் செல்வம். பின்னர் தந்தையிடம் அவன் உயர் கல்வி கற்கின்றான் நண்பர்கள் எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்துருளி வைத்திருப்பதாகவும் தனக்கு மட்டும் அப்பா வாங்கித் தர மாட்டார் என்று கூறுகிறான். என்று தொலைபேசியூடாக தன்னுடன் கதைத்ததாகவும் ஆனால் நாங்கள் படிக்கவில்லை தம்பி படிக்கின்றான். அவன் ஆசைப்பட்ட உந்துருளியை வாங்கிக் கொடுக்குமாறும் அதற்குப் பெருந்தொகையான ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியான அதி உச்ச இயந்திர வலு கொண்ட உந்துருளியை விரும்புவதாகவும், நானும் தங்கையும் பணம் அனுப்புவதாயும் தந்தையைப் பதில் கூற விடாது செல்வம் அனைத்தையும் கதைத்து முடித்தான். பின்னர் வேலாயுதமும், பரிமளமும் சரியென பதில் கூறினார்கள்.

சில நாட்கள் உருண்டோட மதன் தான் விரும்பியவாறு உந்துருளியை கொள்வனவு செய்து தனக்கான வாகன அனுமதிப் பத்திரத்தினையும் பெற்றுக் கொண்டு பாடசாலை முடிந்து வீடு வந்த பின்னர் நண்பர்களுடன் சவாரி செய்வதும் வழக்கமாகியது. தினமும் பத்திரிகைகளை பார்க்கும் வேலாயுதம் பத்திரிகை முன் பக்கத்திலேயே உந்துருளி, வான் விபத்து சம்பவ இடத்தில் உந்துருளியில் பயணித்த இளைஞன் பலி. என பத்திகைகளில் செய்திகள் அவனை ஒரு கணம் தூக்கி போட்டது. மாலை, இரவு வீடு வரும் வரை பரிமளமும் மடியில் நெருப்பை கட்டி சுமப்பதைப் போன்ற வலியில் இருப்பதும் நாள் ஒரு மேனியும் பொழுதொரு வண்ணமும் நிகழ்ந்தேறியது. இரவு நித்திரைக்காக செல்லும் வேலாயுதம் தனது வீடு பிரதான வீதியின் அருகில் அமைந்துள்ளதால் வீதியால் விரைவாக செல்லும் வாகனங்களின் சத்தம். அதன் அதிர்வினால் இரவில் எழுந்து அமர்ந்திருப்பான். பரிமளமும் விழித்தெழுந்து "என்னப்பா எழும்பியிருக்கிறியள்" என்றதும் என்னன்று பரிமளம் நித்திரை கொள்ளுரது. "வீதியால போற வாகனங்கள் எல்லாம் என்ர நெஞ்சால போறமாதிரி இருக்கு" என்று கூறி மீண்டும் நித்திரைக்கு செல்வான்.

அன்றும் விடுமுறை நாள். காலை தேனீரை பருகிவிட்டு உந்துருளியை எடுத்துக்கொண்டு விரைந்தான் மதன். பரிமளமும் வீதியின் வெளி வாசல் வரை பின் சென்று அவன் தலையை கோதி வழிவிடும் வழக்கம் கொண்டவளாக தாய் பரிமளமும் மகன் புறப்படும் போது பின்முதுகால் பத்திரிகையை பதித்து பார்வையிடும் தந்தையின் மனத்தை நன்கு அறிவாள் பரிமளம். நண்பர்களுடன் கூடி மது போதைப் பழக்கங்களில் ஈடுபடுதல் வேலாயுதத்தின் பொறுமையை இழக்கச் செய்தது. அன்றும் மதிய வேளை தன் வீட்டுத் தோட்டத்தில் கட்டியிருந்த பெரிய இன பசு மாடுகளுக்கு தண்ணீர் வைக்க சென்ற வேலாயுதம் தனது வீட்டிலிருந்து பெரிதாக குரல் எடுத்து கத்தும் பரிமளத்தின் சத்தம் கணீரெனக் கேட்க 65 வயதாகும் வேலாயுதம் வேகமாக வீட்டை நோக்கி ஓடிச்செல்ல பரிமளம் தலைவிரி கோலமாய் வீட்டு முற்றத்தில் அமர்ந்திருந்து தலையில் அடித்து அழுத பரிமளத்தின் கைகளை தன் கையால் இறுகப்பற்றிப் பிடித்து அயலவர்களின் உதவியுடன் தொலைபேசியில் வந்த அழைப்பை மீளத் தொடுத்து மதனும் அவன் நண்பனும் உந்துருளியில் விபத்துக்குள்ளாகி மாவட்ட வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதை வேலாயுதத்திற்கு எடுத்துக் கூறினர். அவரின் கண்களிலிருந்து கண்ணீர் மழை போல பொழிந்தது. விம்மி அழுது கொண்டு பரிமளத்தையும் அழைத்துக்கொண்டு முச்சக்கர வண்டியில் சாலை வழியாக வைத்திய சாலையை சென்றடைந்த பரிமளம் கன்றை தவிர்க்க விட்ட பசுவைப் போல ஓலமிட்டு ஓடிச் சென்று தன் மகனை தீவிர சிகிச்சை பிரிவின் கண்ணாடி வழியாக எட்டிப்பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதனின் கால்கள் POP மட்டை போடப்பட்ட நிலையிலும் வலது கை தூக்கிக் கட்டப்பட்டுள்ளதை கண்டு வேலாயுதமும் பரிமளமும் கட்டியணைத்து அழுது புலம்பினர். வெளியே நின்ற மதனின் நண்பர்கள், நண்பிகள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள் என பலரும் வைத்தியசாலையின் முற்பகுதியை நிறைத்தனர்.

எனினும் தனது மகனுடன் சென்ற நண்பன் எங்கே என கேள்வி தொடுக்க அவர் சம்பவ இடத்திலே உயிர் பிரிந்ததாக கூற விம்மி விம்மி அழுதான். அந்தப் பெற்றோர் படும் வேதனையை பார்வையிட்டு பரிமளமும் அனலில் விழுந்த புழுவைப்போல் வேதனையுற்று வாய்விட்டு அழுதாள். சிறிது நேரம் கழித்து மதனை பார்வையிட அனுமதிக்கப்பட்டது. நண்பர்கள் நண்பிகள் மதனிடம் என்ன நடந்ததாக கேட்டறிந்தனர்.

*. உந்துருளி அதி வேக கட்டுப்பாட்டை இழந்ததாகவும்

*. முந்திச் செல்ல முடியாது என்ற இடத்தில் நான் முந்திச் செல்ல முற்பட்டதாகவும்

*. முன்னால் வரும் வாகனத்திற்கு வழி விடாதது தன் மேல் பிழை எனவும்

*. தனது நண்பன் தலைக்கவசம் அணியாதது இறப்பிற்கான காரணம் என்றும்

*. மற்றும் நண்பனின் பிறந்த நாள் நிகழ்வில் மது போதையில் பங்கு கொண்டதாகவும் கூறி தனது பலவீனம் எனது நண்பன் ஒருவனின் உயிரை பறித்து விட்டது என்றும் காலம் வரை தான் ஒரு கொலை காரன் எனச் சொல்லி மனம் நொந்து விக்கி விக்கி அழுதான். நண்பர்களூடாக தன் தந்தை தாயை கண்டதும் இரு கை கூப்பி தான் செய்த பிழையை எண்ணி கண்ணீர் மல்க அழுதான். தந்தை, தாய் சொல்லை கேட்காது நடந்து கொண்டதால் தனக்கு ஏற்பட்ட விளைவையெண்ணி கலங்கி அனைவரும் விழிப்பாக இருந்தால் வீதி விபத்துக்களை தடுத்து கொள்ளலாம் என நண்பர்களுக்கு அறிவுரை கூறுவதை கண்ட வேலாயுதம் தன் மனதில் கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது தவறென மனதில் ஏற்று மதனின் நண்பனின் மரண வீட்டிற்கு ஏறிச்செல்ல முற்சக்கர வண்டியில் சாலை வழியாகச் சென்று கொண்டிருக்கையில் முச்சக்கர வண்டி சாரதியின் ஒலிப்பெட்டியிலிருந்து “பெற்ற மனது சுத்தத்திலும் சுத்தமடா இந்த பிள்ளை மனது பித்தத்திலும் பித்தமடா” எனும் பாடல் ஒலிக்க வேலாயுதத்தின் மடியில் பரிமளம் மெல்ல தலை சாய்த்து அழுதாள்.

**வலைப்பாடு முகிலன் எழுதும்**

**சி.செல்வகுமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளூராட்சி மன்றங்களால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பொதுப்பயன்பாட்டு சேவைகள்

உள்ளூராட்சி மன்றம் என்பது மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட மக்களுக்கு அண்மித்த நிறுவனம் ஆகும். அநேகமாக அவை அரச நிறுவனம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும், ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றும் தொடர்புடைய சட்டநடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு செயல்படவேண்டியுள்ளது.

தமது பிரதேசத்திற்குள் மக்களின் சௌகரியத்தையும், வாழ்வசதியையும், சேமநலனையும் கருத்தில் கொண்டு செயற்படல் இந்நிறுவனங்களின் அடிப்படைப் பணிக்குறிக்கோளாகும். இப்பணிகுறிக்கோளை அடையும் பொருட்டு, சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நிறைவேற்றும் போது, உரியமுறையில் கடமைகள் பணிகள் நிறைவேற்றுவதற்கும் பொறுப்புக் கூறுவதற்கும் சகல உள்ளூராட்சி நிறுவனங்களும் கட்டுப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத்தின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இப்பணிக்குறிக்கோள் பற்றிய விதிமுறைகளை நன்கு விளங்கி சபையின் வளம் மற்றும் அப்பிரதேசத்தினுள் வெளியிலிருந்து கிட்டும் வளங்களை உபயோகித்து ஏதேனும் ஓர் திட்டத்திற்கேற்ப வினைத்திறமையுடன் அப்பிரதேசத்து மக்கள் உட்பட சகலரினதும் ஒத்துழைப்புடனும் அர்ப்பணிப்புடனும் இப்பணிகளை வினைத்திறமையுடன் சிறந்த தலைமைத்துவத்தின் ஊடாக சிறந்த சேவையை பொதுமக்களுக்கு வழங்குதல் வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களால் சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக தனது அதிகார பிரதேசத்திற்குள் மக்களுக்கு கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1. சுகாதார வசதிகளை வழங்குதல்.
   - ➢ அதிகார பிரதேசத்தில் மக்களுக்கு தேவையான பொது மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல், பராமரித்தல் மற்றும் பேணல்.
   - ➢ அதிகார பிரதேசத்தில் தனிப்பட்ட மலசலகூட வசதிகள் இல்லாத மக்களுக்கு தேவையான சுகாதார வசதிகளுடன் மலசலகூடங்களை பெற்றுக்கொடுத்தல்.

**2.** தொற்று நோய் ஒழிப்பு
   - ➢ மலேரியா, டெங்கு நுளம்புகளை அழித்தல் மற்றும் நோய் தடுப்பு
   - ➢ மக்களுக்கு சுத்தமான குடிநீர் விநியோகம் பற்றி தேவையான செயற்பாடுகளில் ஈடுபடல்
   - ➢ நீரிலிருந்து பரவக்கூடிய நோய்களை தடுத்தல்

**3.** தாய், சேய் பராமரிப்பு சேவைகள்
   - ➢ தாய், சேய் சிகிச்சை முகாம்களை நடத்துதல்.
   - ➢ சுகாதார கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

**4.** உணவுடன் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபடல்

அதிகாரப் பிரதேசத்தில் இயங்கும் ஹோட்டல், பேக்கரி, பால் பண்ணை போன்ற உணவு தயாரிக்கும், விற்பனை நிலையங்களை கொண்டு நடத்தும் போது கடைபிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய தரம் பேணல் பற்றி துணைச்சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல், உத்தரவுப் பத்திரம் வழங்கல் மற்றும் சட்டங்களுக்கு உட்படாத இடங்களுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்காமை மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல்

5. சிகிச்சை சேவைகள்
- ஆயுள்வேத மருந்தகங்கள் ஊடாக நோயாளர்களுக்கு சிகிச்சையளித்தல்.
- ஆயுள்வேத மருந்தகங்களுக்கான மருந்துகளை தயாரித்தல் மற்றும் நோயாளர்களுக்கு வழங்குதல்.
- மருத்துவ சிகிச்சை முகாம்களை நடத்துதல்.

6. திண்ம கழிவுப்பொருட்கள் மற்றும் குப்பைகூளங்கள் முகாமைத்துவம்
- திண்ம கழிவுப்பொருட்கள் மற்றும் குப்பைகூழங்களை அப்புறப்படுத்தும் இடங்களை கிரமமாக்குதல்.
- சேவைகளுக்கு தேவையான ஊழியர்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், வாகனங்களை வழங்குதல், ஊழியர் சேமநலன், நேர அட்டவணை தயாரித்தல் மற்றும் அதற்கு ஏற்ப அப்புறப்படுத்தல்.
- குப்பைகளை அப்புறப்படுத்துவதை கிரமமாக்குவதற்காக துணைச்சட்டம் நிறைவேற்றுதல் கட்டணம் அறவிடல் மற்றும் அமுலாக்கல்.
- திண்ம கழிவுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் குப்பைகள் உருவாக்கத்தை குறைத்தல் கொம்போஸ்ட் தயாரித்தல், மீள் சுழற்சியாக்கல் போன்ற செயற்பாடுகளில் மக்களை ஈடுபடுத்துதல்.
- விசேடமான திண்மக் கழிவுகளை தனியே அப்புறப்படுத்துவதற்கு பொருத்தமான முறைகளை கையாளுதல்.

  உதா: - வைத்தியசாலை கழிவுகள், தொழிற்சாலை கழிவுகள், மலர்சாலை கழிவுகள், கட்டட கழிவுகள்.
- மேற்கூறிய பணிகளை நிறைவேற்றுவதற்காக செயற்றிட்டங்களை வகுத்தல், உத்தியோகத்தர்களை கொண்டு செய்வித்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல்.

7. பொது வசதிகள்
- பொதுச் சந்தை சேவை
- சந்தை பிரதேசத்திற்கு பெயர் சூட்டி பகிரங்கப்படுத்தல் மற்றும் துணைச் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ளுதல் மற்றும் பகிரங்கப்படுத்தல்.
- பொதுச் சந்தையில் வர்த்தகர்களுக்கும் பொதுமக்களுக்கும் தேவையான மலசலகூட வசதிகளை வழங்குதல்.
- பொதுச் சந்தை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல், துப்பரவுச் செய்வதற்கு ஊழியர்களை ஈடுபடுத்தல்.
  - மலசலகூட வசதிகள்
  - வாகன தரிப்பிட வசதிகளை ஏற்படுத்துதல்
  - குடிநீர், மின்சார வசதிகளை வழங்குதல்
  - வர்த்தக தளங்கள் அல்லது வர்த்தக கூடங்களை அமைத்துக்கொடுத்தல்.
  - கழிவுகள், குப்பைகளை அப்புறப்படுத்தல்.
  - கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் நிறையை பரிசோதிப்பதற்கு அளவை உபகரணங்களுடன் உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ சுத்தமாகவும் நியாயமான விலைக்கும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றதா என்பதை பரிசோதித்தல்.

➢ உரிய இடங்கள் தவிர வேறு இடங்களில் குறித்துரைக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெறுவதை தடுத்தல்.

➢ சந்தையை கிரமமாக பராமரித்தல்.

**8.** வாராந்த சந்தைகளை கொண்டு நடத்துதல்

➢ வாராந்த சந்தைகளை நடத்துதல் மற்றும் கட்டணங்களை விதித்தல் பற்றிய துணைச்சட்டங்களை நிறைவேற்றி பகிரங்கப்படுத்தல்

➢ வாராந்த சந்தை வளாகத்தில் வர்த்தகர், நுகர்வோருக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- மலசலகூட வசதிகள்
- வாகன தரிப்பிட வசதிகளை ஏற்படுத்துதல்
- குடிநீர், மின்சார வசதிகளை வழங்குதல்
- வர்த்தக தளங்கள் அல்லது வர்த்தக கூடங்களை அமைத்துக்கொடுத்தல்.
- கழிவுகள், குப்பைகளை அப்புறப்படுத்தல்.
- கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் நிறையை பரிசோதிப்பதற்கு அளவை உபகரணங்களுடன் உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்துதல்.

**9.** வீதி விளக்கு சேவைகளை கொண்டு நடாத்துதல்

➢ வீதி விளக்கு சேவைகள் அமைந்துள்ள மின்கம்பம், வீதிகளை பட்டியலிடல், இலக்கமிடல், ஆவணப்படுத்தல் என்பற்றின் ஊடாக தரவுப் பட்டியலைத் தயாரித்தல்.

ஒவ்வொரு வீதி விளக்கு கம்பத்திற்கும் மின்குமிழ் பொருத்துதல், இணைப்புக்களை புதுப்பித்தல் பற்றி பராமரிப்பு பட்டியலை திகதி அடிப்படையில் பேணுதல்.

➢ வீதி விளக்குகளை இயக்குதல், முடக்கிவிடல் பற்றி மக்களின் பங்களிப்புடன் நிகழ்ச்சிகளை அல்லது பொருத்தமான வேலைத்திட்டமொன்றை பயன்படுத்தல்.

➢ மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை எடுத்தல்.

➢ பிரஜைகள் சாசனத்தின் ஊடாக செயல் முறை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டடல்.

**10.** குடிநீர் விநியோகம்

➢ தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நீர் விநியோகிக்கப்படாத பிரதேசங்களுக்காக கிராமிய சிறு குடிநீர் விநியோகத்திட்டங்கள் , கிணறுகள், பீலிகள், குழாய்கள் மூலமாக நீர் வழங்கல்.

➢ கிராமிய சிறுகுடிநீர் விநியோக திட்டங்கள் மூலம் விநியோகிக்கும் போது மேற்படி நீர் விநியோகம் தொடர்பாக பிரஜைகள் பிரகடன நடைமுறைகள் மூலம் மேற்படி நடைமுறைகளை மக்கள் அறிந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

➢ நீர் வழங்கல், கட்டணங்கள் அறவிடல் போன்றவற்றை முறையாக செயற்படுத்தல், நீர் தொடர்பான துணை விதிகளையாக்குதல்.

➢ குழாய்க் கிணறுகள், ஆழம் குறைந்த கிணறுகள், பீலிகள், குழாய்களை செயற்படுத்தல், திருத்த வேலைகளையும் பராமரிப்புகளையும் காலத்திற்கேற்ப செய்து கொடுத்தல், அதன் உரிமை தொடர்பான ஆவணங்களை முறையாக பராமரித்தல், பாதுகாப்பற்ற கிணறுகளின் நிர்வாகத்திற்கும் மேற்பார்வைக்குமாக துணைவிதிகளை ஆக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீர் விநியோகத் திட்டங்களின் திருத்த வேலைகள், பராமரிப்பு பணிகளுக்காக சமூக பங்களிப்பை பெறல்

**11.** தீயணைப்பு சேவைகளை முன்னெடுத்தல்

- தீயணைப்புச் சேவைகளை முன்னெடுத்தல், கட்டணங்கள் அறவிடல் தொடர்பாக தீயணைப்புச் சேவைகள் துணை விதிகளையாக்குதல், நிறைவேற்றப்பட்ட துணைவிதிகளை ஏற்றுக்கொள்ளல்
- தீயணைப்புச் சேவைகள் தொடர்பாகவும் அதற்காக பின்பற்றப்படும் நடைமுறைகள் தொடர்பாகவும் பிரஜைகள் பிரகடனம் மூலமாக மக்களுக்கு விழிப்பூட்டல்
- தீ விபத்துக்களை தடுத்தலும், தீர்வுகள் தொடர்பான நடைமுறைகளை வகுத்தலும். பொது இடங்களில் தீயணைப்பு உபகரணங்களை பொருத்துதல்
- தீயணைப்பு சேவையாற்றும் பணியாட் தொகுதியினரை முறையாக பயிற்றுவித்து தயார் நிலையில் வைத்தல், தேவைக்கேற்பவும் காலத்திற்கு காலம் தீயணைப்பிற்கான ஒத்திகைகளை நடாத்துதல், தீயணைப்பு வீரர்களின் உடற் சுகாதாரம் மற்றும் துப்பரவு ஏற்பாடுகள் தொடர்பாக உரிய கட்டளைகளை பிறப்பித்தல், ஒழுக்கத்துடன் மேற்படி பணிகளை நிறைவேற்றல் தொடர்பாக தொடர்ச்சியாக கண்காணித்தல் மற்றும் அவர்களுக்கு தேவையான சீருடைகளையும் இதர வசதிகளையும் பெற்றுக் கொடுத்தல்.
- தீயணைப்பு உபகரணங்கள், இயந்திரங்கள், தீயணைப்பு வாகனங்களை தயார் நிலையில் வைத்திருத்தல், அடிக்கடி பரிசோதித்தல்.
- தீ விபத்தொன்று ஏற்படும் பட்சத்தில் அவ்விடங்களை நோக்கி எளிதில் அண்மிக்கும் வகையில் வீதி வரைபடம் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும்.
- முறையான தகவல் பரிமாற்றல் கட்டமைப்பு மற்றும் தீயணைப்பு சேவை யுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களை ஒருங்கிணைக்கக்கூடிய வேலைத்திட்டமொன்றை வகுத்தல். (உதாரணமாக, பொலிஸ், இராணுவம், மருத்துவமனை மற்றும் வேறு பொது அமைப்புக்களுடன் இணைந்து பொதுவான திட்டத்தினை வகுத்து வைத்திருத்தல்.

**12.** பொது மயானங்களும் தகனக்கூடச் சேவைகளும்

- சபைக்கு சொந்தமான பொது மயானங்களை குடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தல்.
- பொது மயானங்களை பரிசோதித்தல், கட்டணங்களை அறவிடல் தகனக்கூட நிர்வாகம் மற்றும் கட்டணம் அறவிடல் தொடர்பாக துணைவிதிகளை ஆக்குதல்.
- பொதுமயானங்களையும் தகனக்கூடங்களையும் பயன்பாட்டிற்கு எடுத்தல் தொடர்பாக பிரஜைகள் பிரகடனம் மூலம் மக்களுக்கு விழிப்பூட்டல்
- பொதுமயானங்கள் அமைந்துள்ள காணிகள் சபைக்கு சொந்தமானவையென உறுதிகள் மூலம் முறைப்படுத்தல், ஆவணப்படுத்தல் மற்றும் முன்னெடுத்தல்.
- சபையின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்கள் பொது அமைப்புக்கள் மூலம் வருடந்தோறும் சுத்தப்படுத்தல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கட்டடங்களை புதுப்பித்தலும் பராமரித்தலும்.

**13.** விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாட்டரங்கங்களை பராமரித்தல்

- சபைக்கு சொந்தமான விளையாட்டு மைதானங்களை இணைத்துக்கொண்டு சனசமூக அமைப்புக்கள் சார்ந்த விளையாட்டு கழகங்களை அமைத்தல்.
- நிறுவனத்தின் விளையாட்டு உத்தியோகத்தரின் அல்லது அரச விளையாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகத்தர் ஒருவரின் ஒத்துழைப்பை பெற்று ஆளுகை பிரதேசத்தினுள் விளையாட்டு போட்டிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் உள்ளூராட்சி சபைகள் மட்டத்தில் அப்பணிகளை முன்னெடுத்தல்.

- விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாட்டரங்குகளுக்கு ஆண்டுதோறும் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைப்பணிகளை மேற்கொள்ளல்.
- குறித்த காணிகள், கட்டடங்களை பொருட் பதிவேடுகளில் குறித்தல், மற்றும் ஆவணப்படுத்தி முன்னெடுத்தலும் ஆண்டுதோறும் ஆய்விற்குட்படுத்தலும்

**14.** நலனோம்புகை சேவைகளை பேணி வருதல்

- நூலக சேவைகள்
- நூலகச் சேவைகள் துணைவிதிகளை பேணி வருதலும் அப்பணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருத்தலும்.
- நூலக சேவைகளுக்கு சமுதாய பங்களிப்பினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு நூலக அபிவிருத்தி குழுக்களையும் வாசகர் வட்டங்களையும் தாபித்தல்.
- நூலக பணிகளுக்காக வருடாந்த வரவு செலவு திட்டத்தின் மொத்த பெறுமானத்தின் 1% வீதத்தையேனும் ஒதுக்கீடு செய்தல்.
- நூலக நடவடிக்கைகளின் பிரகாரம் இரவல் கொடுக்கும பிரிவு, உசாத்துணை பிரிவு, சிறுவர் பிரிவு போன்றவாறு பிரிவுகளை உருவாக்கி முறையான விதத்தில் பேணி வருதல் வேண்டும்.
- இலத்திரனியல் இணையவழி நூலகம் ஒன்றை தாபித்து மக்களுக்கு சேவை வழங்குதல். (e-library service)
- நூலக புத்தகங்களின் பாவனை தொடர்பாக பதிவேடுகளை தயாரித்து இற்றைப்படுத்தி பேணிவருதல் வேண்டும்.
- புத்தகங்களை விநியோகித்தல், மீளப்பெற்றுக்கொள்ளல், பொருட்பதிவு பட்டியலை பேணி வருதல் மற்றும் கடமைகளை எழுத்தில் பொறுப்பளித்தல் அத்துடன் அப்பணிகளை செவ்வனே ஈடேற்றுதல் மற்றும் நூலக பொறுப்பாளரினால் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டிருத்தல்.
- நூலகத்தின் உள்ளக ஒழுங்குபடுத்தல்களையும் வெளிப்புற ஒழுங்குபடுத்தல்களையும் முறையாக திட்டமிட்டு பேணிவருதல்
- வருடாந்த தொகை மதிப்பீடுகளை நடாத்துதல்

**15.** முன்பள்ளிச் சேவைகள்

- ஆளுகை பிரதேசத்தில் உள்ள இடைநிலை சிறுவர் பராயத்தை கடக்கும் சிறுவர்களின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு சபையின் நிதி நிலமைகளை கருத்திற்கொண்டு முன்பள்ளிகளை தாபித்தல்.
- தேவையான கட்டட வசதிகள் உள்ளிட்ட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.
- பொருத்தமான முன்பள்ளி ஆசிரியர்களை உரியவாறு நியமித்தல்
- ஒழுங்குமுறைக்குட்பட்ட விதத்தில் சிறுவர்களை சேர்த்தல்.
- சிறுவர் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தலும் பாதுகாப்பளித்தலும்.
- இச் செயற்பாடுகளை அவ்வப்போது மேற்பார்வை உத்தியோகத்தர்கள் மூலம் மேற்பார்வை செய்தல்.
- சிறுவர்களின் வருகை மற்றும் செயற்பாடுகள் சம்பந்தமாக தகவல்களை பெற்றுக்கொள்ளுதலும் பெற்றோருக்கு ஆற்றுப்படுத்தலும்.
- சிறுவர்களது செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16.** உள்ளூராட்சி மன்ற அதிகார எல்லைக்குள் வேலைவாய்ப்புத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

**17.** கமத்தொழில், வீட்டு விலங்குகளை வளர்த்தல், ஆராய்ச்சிகளை நடாத்துதல், பரிசோதனைப்பண்ணைகளைப் பேணுதல் மற்றும் அந்நோக்ககங்களுக்கான ஆய்வுகளைச் செய்தல்.

**18.** மழைவீழ்ச்சி, வெள்ளப்பெருக்கு, புயல் அபாயம், தீவிபத்து, பூமிநடுக்கம், பஞ்சம் அல்லது கொள்ளை நோய் காரணமாக விளைந்த இடுக்கண்ணுக்கு நிவாரணமளித்தல்.

**19.** கலாச்சார நிலயங்களை தாபித்தல், இலக்கிய கலாச்சார நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல்.

**20.** கிராமிய பெண்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் தேர்ந்தெடுத்த கிராமங்களில் ஒருங்கிணைந்த அபிவிருத்தியிலும் சமூக அபிவிருத்தித் திட்டங்களிலும் கிராம அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கும் சபை நிதியை செலவழித்தல்.

**21.** வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் பராமரிப்பற்றவர்கள் (கதியற்றவர்கள்) உடல், உள அல்லது சமூக ரீதியான குறைபாடு உள்ளவர்களுக்கு புனருத்தானம் செய்து அபிவிருந்தி செய்வதற்கு சபை நிதியை செலவழித்தல்.

**22.** ஏழைமக்களுக்கு வீட்டு இடவசதிகளை ஏற்பாடு செய்தல்.

**23.** உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தான பொதுவழிகளை பேணுதலும் அவற்றை பழுது பார்த்தலும்.

1. சுகாதார வசதிகளை வழங்குதல்
    a. அதிகார பிரதேசத்தில் மக்களுக்குத் தேவையான பொது மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல், பராமரித்தல் மற்றும் பேணல்.
    b. அதிகார பிரதேசத்தில் தனிப்பட்ட மலசலகூட வசதிகள் இல்லாத மக்களுக்கு தேவையான சுகாதார வசதிகளுடன் மலசலகூடங்களை பெற்றக் கொடுத்தல்.
2. தொற்றுநோய் ஒழிப்பு
    a. மலேரியா, டெங்கு நுளம்புகளை அழித்தல் மற்றும் நோய்த்தடுப்பு.
    b. மக்களுக்குச் சுத்தமான குடிநீர் விநியோகம் பற்றி தேவையான செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
    c. நீரிலிருந்து பரவக்கூடிய நோய்களைத் தடுத்தல்.
3. தாய் சேய் பராமரிப்பு சேவைகள்.
    a. தாய் சேய் சிகிச்சை நிலையங்களை நடாத்துதல்.
    b. சுகாதார கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
4. உணவுடன் தொடர்புடைய செயறபாடுகளில் ஈடுபடுதல்.
    அதிகாரப் பிரதேசத்தில் இயங்கும் ஹோட்டல், பேக்கரி

**Parameshwaran (IO)**
*Department Of Local Government*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையே உயர்வு

பொது நூலகம்-பூநகரி

"வாசிக்கும் சமூகத்தினை
உருவாக்க
சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்"

Print@Mickey-Chava
021-2-27-17-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org